வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை [7

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ

(மாதப் பத்திரிகை.)

பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(… ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது
1937-வரு ஜூலை-மீ [ஆடி-மீ

JL
ழ2றை11, N3555
N137·3·7
189907

விஷயம்.

1.	குறிப்புகள்		1
2.	ஸ்ரீஆளவந்தாரும் தேசிகனும்		2—4
3.	ஸுபாஷிதநீவீ	[தொடர்ச்சி]	49—56
4.	கோதாஸ்துதி	[தொடர்ச்சி]	91—114
5.	ரக்ஷாவிமர்சம்	[தொடர்ச்சி]	33—36

ஸ்ரீ காஞ்சீ அண்ணங்கராசாரியருக்குச் சென்ற வைகாசிமாதத்தில் அனுப்பிய நோட்டீஸில் அவர் ஸ்ரீ தேசிகஸ்ரீஸூக்திகளில் சொல்லிவரும் தூஷணங்களை ஸபையில் ஸ்தாபிக்கத் தயாராயிருப்பதாய் ஸ்ரீ. உவே. வடகரை ராமானுஜாசாரியர் ஸ்வாமி ஸாதித்தார் என்றிருக்கிறது. ஷை வடகரை ராமானுஜாசாரியார் தான் அப்படிச் சொல்லவில்லை என்றும், நாம் அண்ணங்கராசாரியருக்கு ஆப்தநண்பர் என்று எழுதியதும் ஸரியல்ல என்றும் 15—7—37-ல் அனுப்பிய கடிதம் மூலம் தெரிவிக்கிறார். ஷை கடிதத்தில் கண்ட அதிகமான ப்ரஸங்கங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஸம்ப்ரதாய ஸம்பந்தமான செய்திகள்.

சென்னை— புரசைவாக்கம், க்ருஷ்ணபவனம் என்னும் க்ருஹத்தில ஸ்ரீ-உ-வே வித்வான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி பல ப்ரமுகர்களின் வேண்டுகோளின்மேல் ஸ்ரீபாகவத ப்ரவசனத்தைத் தொடங்கியிருக்கிறார். இதே க்ருஹத்தில் இதே ஸ்வாமியைக்கொண்டு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீகீதாபாஷ்யம், ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம் என்னும் க்ரந்தங்களின் காலக்ஷேபங்கள் தொடங்கிப் பூர்த்தியாகியிருக்கின்றன. தற்காலம் பகவத்விஷயகாலக்ஷேபம் நடந்துகொண்டிருக்கிறது.

ஸ்ரீ ஆண்டாள்

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3	ஈச்வர-௵ ஆடி-௴	ஸஞ்சிகை 7

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் கிமப்யவமதஸ்ப்ருஹம் ।
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேசாபிதம் மஹ: ॥

குறிப்புகள்.

189107

ஆடி மாஸம்:—

"வேயர்புகழ் வில்லிபுத்தூராடிப்பூரம் மேன்மேலு மிக விளங்க விட்டு சித்தன் தூய திருமகளாய் வந்தரங்கனார்க்குத் துழாய்மாலை முடிசூடிக்கொடுத்த மாதாகிய" ஸ்ரீஆண்டாள் திருவவதரித்ததும், இவ்வாண்டாள் பெரிதும் ஈடுபட்ட ஆயர்குலத்தில் தோன்றிய மணிவிளக்காகிய தூயபெருநீர் யமுனைத்துறைவனை பின்னுமோர் யமுனைத்துறைவனாய் சொட்டைக் குலத்தில் வந்தவதரித்ததுமாகிய ஆடி மாஸம் பிறந்தது. இவ்வாடிமாஸமே தக்ஷிணாயனத்தின் முதல்மாஸம். ஆயினுமென்ன?

"திக் தக்ஷிணாபி பரிபக்த்ரிமபுண்யலப்யாத்
ஸர்வோத்தரா பவதி தேவி தவாவதாராத்"

என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தபடி ஸ்ரீஆண்டாள் அவதரித்ததால் தக்ஷிணதிசை ஸர்வோத்தர திசையானது போல் தக்ஷிணாயனமும் உத்தராயணமேயாயிற்று.

ஸ்ரீஆளவந்தார் அவதார தினம், ஆடி-௴ 8௳ (23—7—37)
ஸ்ரீஆண்டாள் அவதார தினம், ஆடி ௴ 25௳ (9—8—37)

ஸ்ரீ:

ஸ்ரீ ஆளவந்தாரும், ஸ்ரீ தேசிகனும்.

உயர்வினில்நிவந்த ஒருதனியறிவாக விளங்கும் நம் வேதாந்த தேசிகன் ஸ்ரீ ஆளவந்தாரை

'விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாது ப்ருந்தாவநே ஸ்திதம்।

நிரஸ்த ஜிஹ்மக ஸ்பர்ஶே யத்ர க்ருஷ்ண: க்ருதாதர:' ॥

என்கிறச்லோகத்தால் ஸ்துதிக்கிறார். ஸ்ரீ ஆளவந்தாரையும் யமுனா நதியையுங் குறிக்கும் பதப்ரயோகங்களால், ஶ்லேஷையென்னும் அலங்காரத்துக்கு ஓர் உத்தம உதாஹரணமான இந்த ச்லோகத்துக்கு, "ஸாதுக்களான கோபாலர்கள் வஸிக்கும் பிருந்தாவனத்திலுள்ளதும், காளியனென்னும் ஸர்ப்பம் விட்டு நீங்கியதும், கண்ணனுடைய ப்ரீதிக்குப் பாத்திரமானதுமான யமுனையாற்றில் துளைந்தாடுகிறேன்" என்று யமுனைவிஷயமாகவும், "பெரியநம்பி முதலிய ஸாதுக்களை ரக்ஷிப்பதிலேயே நோக்குள்ளவரும், இதற்கு இடையூறாகவிருந்த குத்ருஷ்டிகளையும், மற்றும் ராகத்வேஷாதி நித்ய சத்ருக்களையும் ஜயித்தவரும், கண்ணனுடைய ப்ரீத்யதிசயத்துக்குப் பிரதான பாத்திரமானவருமான ஸ்ரீ யாமுனாசார்யரை த்யானித்து அனுபவிக்கிறேன்" என்று ஆளவந்தார் விஷயமாகவும் பொருளுரைப்பார்கள்.

"சான்றோர் கவியெனக்கிடந்த கோதாவரியினை வீரர்கண்டார்" என்றார் கம்பர். "எங்கள் யமுனையும் சான்றோர்கவியெனவே கிடந்தது" என்று நம் ஆசிரியர் திருவுள்ளம் போலும்.

உத்தம கவியான ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்தோத்ரரத்னம் ஸ்தோத்ரங்களுக்குள் சிறந்தது இதன் பெருமைக்கு,

" யாமுநார்ய ஸுதாம்போதிம் அவகாஹ்ய யதாமதி।

ஆதாய பக்தியோகாக்யம் ரத்னம் ஸந்தர்ஶயாம்யஹம் ॥ "

என்று உபக்ரமித்து ஸ்ரீபகவத்ராமானுஜன் அருளிச்செய்த ஸ்ரீ வைகுண்ட கத்யமே ஓர் நிதர்சனமாகும். ஸ்ரீமத்ராமாயணத்தை " ராமாயணார்ணவம் " " ராமசரிதாம்ருதஸாகரம் "

என்றும், திவ்யப்ரபந்தங்களை " த்ராவிடவேதஸாகரம் " என்றும் கூறுவது போல, ஸ்ரீபாஷ்யகாரர் இவரை ரத்னங்களால் நிறையப்பெற்ற ஓர் அம்ருத ஸமுத்ரமாக வர்ணிப்பாரானால் இவருடைய பெருமையைப்பற்றி வேறு பேசவும் வேண்டுமோ?

ஸ்ரீ ஆளவந்தார் இன்றைக்குச் சற்றேறக்குறைய 1000-வருஷங்களுக்குமுன் வீரநாராயணபுரத்தில் ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருப்பேரனாராக வந்தவதரித்தார். "குலத்தளவாகுங்குணம்" என்றபடி இளமையிலேயே எல்லா நற்குணங்களும் வாய்க்கப் பெற்று, கல்விகற்குங்காலையிலும் கண்டோர் அதிசயிக்குமாறு தமது ஞான விகாஸங்களைக் காட்டி,

" ஸ ஜாதோ யேந ஜாதேந யாதி வம்ஶ: ஸமுந்நதிம் "

என்றபடி ஸ்ரீமந்நாதமுனிகளின் குலத்துக்கே இவரோர் குலவிளக்காம் என்று பலரும் கொண்டாடும் வண்ணம் சாஸ்த்ராப்யாஸம் செய்து, இச்சிறுபிராயத்திலேயே கல்விச் செருக்கினால் மதங் கொண்டு திரிந்த ஆக்கியாழ்வான் என்னும் பண்டிதனுடைய கொழுப்படக்கி "தேஜஸாம் ஹி ந வய: ஸமீக்ஷ்யதே" என்று மஹாகவி கூறியதை மெய்ப்பித்தருளினார்.

" ந வயம் கவயஸ்து கேவலம் ந வயம் கேவலதந்த்ரபாரகா: । அபி து ப்ரதிவாதிவாரணப்ரகடாடோபவிபாடநக்ஷமா: " என்னும் இந்த ச்லோகம் ஆக்கியாழ்வானுக்கு ஸ்வாமியால் அனுப்பப்பட்டது.

இவ்வாறு வாதத்தில் வெற்றிபெற்ற ஸ்ரீ ஆளவந்தார் சோழ மன்னனால் பாதிராஜ்யம் கொடுக்கப்பெற்று சிரகாலம் ராஜ்ய போகத்தில் ஸுகமாக எழுந்தருளியிருந்தார்.

ராஜபதத்தில் " நரம் ஶ்ரியா ஜுஷ்டமிவோபஜீவிந: " என்று வால்மீகி கூறியபடி உபஜீவிகளால் சூழப்பட்டு, கட்டுங் காவலுமாய், ஆசார்யரான மணக்கால் நம்பிகளுக்கும் அணுகவொண்ணாத நிலையில் இருந்தும், ஸ்ரீசேதனஸம்ரக்ஷணலீலாஸக்தனாகிய எம்பெருமானது க்ருபையால் ஓர்காலவிசேஷத்தில் ந்யஸ்தபாரராகி "நாட்டில் பிறந்தவர் நாரணற்காளன்றி யாவரோ;" என்றபடி வைராக்யம் பிறந்து மணக்கால் நம்பிகள் திருவடிகளில் ஆச்ரயித்து தர்சனப்ரவர்த்தகரானார்.

குருகைக் காவலப்பன் ஒருகால் பகவத்யானத்திலீடுபட்டிருக்கும் போது, யோகம் பங்கமாகுமென்ற பயத்தால் சுவர்ப் புறத்தொதுங்கிநின்ற ஸ்ரீ ஆளவந்தாரைக் கண்ணன் கடாக்ஷித்தருளிய ஆதரவைப் பெரிதுங்கொண்டாடுகிற ஸ்ரீ தேசிகன் "யத்ர கிருஷ்ண: கிருதாதர:" என்று ஸாதித்தார். கண்ணன் ஸ்ரீ ஆளவந்தாருக்கோர் குலதனம். 'ஸ்தோஷ்யாமி ந: குலதனம்' என்றாரம்பித்தன்றோ இவர் ஸ்தோத்ரரத்னமருளிச்செய்தது. யானோர் அரசனாயினும் எனது குலதனத்தை யனுபவிக்க பிரஜைகளாகிய உங்களுக்குமுரிமையுண்டு. 'ஆதலால் தொண்டரெல்லீரும்வாரீர், தொழுது தொழுது நின்றார்த்தும்' என்று அழைக்கின்றார் போலும்.

நீளவந்தின்று விதிவகையால் நினைவொன்றிய நாம்
மீளவந்தினும் வினை யுடம்பன்றி விழுந்துழலாது
ஆளவந்தாரென வென்றருள் தந்து விளங்கிய சீர்
ஆளவந்தாரடியோம் படியோமினி யல்வழக்கே.

ஸ்ரீ காஞ்சீ ஹஸ்திகிரிவரதர்.

ஸ்ரீகாஞ்சீ ஹஸ்திகிரிவரதனுடைய புராதன மூலவர் ஷை ஸந்நிதியிலுள்ள அநந்தஸரஸ்ஸில் அநேக நூற்றாண்டுகளுக்குமுன் எழுந்தருளப்பண்ணப்பட்டு அங்கு திருவநந்தாழ்வானால் ஆராதிக்கப்பட்டு வருகிறார். இவரை ஆனி-மீ 29உ இரவில் இந்த ஸரஸ்ஸினின்றும் எழுந்தருளப்பண்ணி வஸந்தோத்ஸவமண்டபத்தில் ஒரு மண்டலகாலம் ஆராதித்து பிறகு அந்த ஸரஸ்ஸிலேயே திரும்பவும் எழுந்தருளப்பண்ணுகிறார்கள். 45-வருஷங்களுக்குமுன் ஒரு தடவை இம்மாதிரி ஆராதனம் நடந்தது. ஸ்ரீதேசிகனும் மற்றுமுள்ள ஆசார்யர்களும் ஈடுபட்டுள்ள எம்பெருமானுடையதும் ஒரு புருஷாயுஸ்ஸில் ஒரு தடவைக்கு மேல் கிடைப்பதரிதாகியதுமான இந்த ஸேவையை ஆஸ்திகர்கள் அனைவரும் ஸேவித்து கிருதார்த்தராவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸூர்யனுடைய ப்ரபையைப்போன்றது ஈச்வரனுடைய ப்ரபையான ப்ரபஞ்சம். மனமெனும் சுவற்றில் ஈச்வரனையெழுதிபஜித்து தன் ஜ்ஞாநாநந்தஸ்வரூபம், குணாஷ்டகங்கள் இவற்றின் ஆவிர்ப்பாவத்தைப் பெறலாமேயல்லாது, ஸூர்யன் ப்ரபைபோன்ற அவருடைய ஜகதைச்வர்யத்தை அடையமுடியாது. அவருக்கு ப்ரபஞ்சம் முழுவதும் சரீரமாகும்; அதுபோல் நமக்கு ஆகாது. ஜகத்தைக் குறித்து நாம் ஆத்மாவல்லாததால், சரீரமென்னும் சுவரில்லாமல் ஜகதைச்வர்யம் என்னும் உருவத்தை நாம் எழுதிக்கொண்டு அடையமுடியாது. பெரியோரைப்போல சில அம்சங்களில் கர்வத்தால் ஆகப்பார்த்தாலும், அவர்களுக்கு அஸாதாரணமான மேன்மை விஸ்தாரங்களை நாம் அடையமுடியாது, உயர்ந்த காவ்ய கர்த்தாக்களைப்போல அநுஸரித்துச் சப்த அமைப்புகளைச் செய்யலாம்; அந்தக் காவ்யங்களின் களையையும் த்வநிகளையும், ரஸங்களையும் நாம் காவ்யங்களில் அநுஸரிக்க முடியுமோ? (16)

𑌅𑌪𑌿 𑌸𑌤𑍍𑌪𑌥𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌮𑌾𑌶𑌾𑌃 𑌪𑍂𑌰𑌯𑌤𑌾𑌮𑌪𑌿 ।
𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑍇𑌘𑌾𑌨𑌾𑌂 𑌹𑌨𑍍𑌤 𑌮𑌾𑌲𑌿𑌨𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥௧௬॥

அபி ஸத்பதநிஷ்டாநாமாசா: பூரயதாமபி I
அகஸ்த்யவ்ருத்திர்மேகாநாம் ஹந்த மாலிந்யகாரணம் II

(ப-ரை) 𑌸𑌤𑍍𑌪𑌥𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 [ஸத்பதநிஷ்டாநாமபி]-நல்ல மார்க்கத்திலிருப்பவராயினும், (நக்ஷத்திரங்கள் நிறைந்த ஆகாசத்திலிருந்தாலும்,) 𑌆𑌶𑌾𑌃 [ஆசா:] -ஆசைகளை, (திக்குகளை,) 𑌪𑍂𑌰𑌯𑌤𑌾𑌮𑌪𑌿 [பூரயதாமபி] - பூரித்தாலும், 𑌮𑍇𑌘𑌾𑌨𑌾𑌂 [மேகாநாம்] - மேகங்களுக்கு, 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 [அகஸ்த்யவ்ருத்தி:] - அகஸ்த்யர் செய்த அத்புதகார்யங்களை அநுஸரிக்கப்பார்ப்பது, 𑌹𑌨𑍍𑌤 [ஹந்த] - ஐயோ, 𑌮𑌾𑌲𑌿𑌨𑍍𑌯𑌕𑌾𑌰𑌣𑌂 [மாலிந்யகாரணம்] - கருப்பு வர்ணம் என்கிற தோஷத்திற்குக் காரணமாகும்.

13-ம் ச்லோகத்தில் முதல் '𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌨𑌾𑌂' என்பதற்குப் பதிலாக "𑌤𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍" என்றும், 14-ம் ச்லோகத்தில் '𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑍍' என்னும் முதலைகள் என்றும் திருத்திக்கொள்ளவும்,

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— நல் மார்க்கத்தில் நடந்துவந்தாலும், தங்களிடம் வரும் யாசகர்கள் மனோரதங்களைப் பூர்ணம் செய்துவந்தாலும், தங்களுக்கு அஸாத்யமான பெரிய கார்யங்களை யாரோ பெரியவர் செய்தாரே என்று தானும் டம்பமாய் அநுஸரிப்பதற்குமுயன்றால், தோஷமேவரும்; ப்ரயத்னமும் வீணாகும். அகஸ்த்யமுனி ஸத்பதம் என்னும் ஆகாசத்தில் (நக்ஷத்ரமண்டலத்தில்) இருப்பவர். அவரும் ஓர் நக்ஷத்ரம். ஸந்மார்க்கத்தில் நிலைநிற்பவர். மேகங்களும் அவரைப்போல ஆகாசத்தில் இருக்கின்றன. அவர் தென்திக்கைப் பூரிப்பவர்; கோருபவருக்கு வேண்டியவைகளைக் கொடுப்பவர். மேகங்கள் திக்குகளைப் பூரிக்கின்றன; ஜனங்கள் மனோரதங்களை வழங்குகின்றன. ஆயினும், அகஸ்த்யர் செய்த ஓர் அத்புதகார்யமான ஸமுத்திரபானத்தைத் தாங்களும் செய்து அகஸ்த்யரைப்போல ஆகப் பார்க்கின்றன. கொஞ்சம் ஸமுத்ரஜலத்தைப் பானம் செய்துவிட்டு, நாமும் அகஸ்த்யவ்ருத்தியை அநுஸரித்தோம் என்று கர்வமாய் உயரக் கிளம்புகின்றன; உருமுகின்றன. மேகங்கள் முன்பு வெண்மையாயிருந்தவை; அகஸ்த்யவ்ருத்தியை அநுஸரிக்க வெண்ணி, ஸமுத்ரஜலத்தைப் பானம் செய்ததும் கருத்துப்போகின்றன; மலினமாகின்றன. ப்ரஹ்மத்தோடு ஸாதர்ம்யம் வருமானாலும், ப்ரஹ்மத்திற்கு அஸாதாரணமஹிமையான ஜகத்ஸ்ருஷ்ட்யாதிவியாபாரங்கள் முக்தருக்கு ஸித்திக்காது. முழு அம்சங்களிலும் ஸாதர்ம்யம் வராது; ப்ரஹ்மமேயாகவும் முடியாது. (16)

அஸ்து தாவதகஸ்த்யேந ஜஹ்நோர்மஹிமநிஹ்நவ: |
கா கதா தஸ்ய பாலஸ்ய விச்வக்ராஸேऽப்யத்ருப்யத: ||

அஸ்து தாவதகஸ்த்யேந ஜஹ்நோர்மஹிமநிஹ்நவ- |
கா கதா தஸ்ய பாலஸ்ய விச்வக்ராஸேZப்யத்ருப்யத: || (17)

(ப-ரை) அகஸ்த்யேந [அகஸ்த்யேந] - அகஸ்த்யரால், ஜஹ்நோ: [ஜஹ்நோ:] - ஜஹ்நு என்னும் ராஜர்ஷியினுடைய, மஹிமநிஹ்நவ: [மஹிமநிஹ்நவ:] - மஹிமையை அதிசயிப்பது என்பது, அஸ்து தாவத் [அஸ்து தாவத்] - இருக்கட்டும். பாலஸ்ய [பாலஸ்ய] - பாலவடிவில், விச்வக்ராஸேऽபி [விச்வக்ராஸேऽபி] - விச்வம் முழுவதையும் உண்டும், அத்ருப்யத: [அத்ருப்யத:] - வயிறு நிரம்பாத, (அல்லது, அத்ருப்யத: [அத்ருப்யத:] - கர்வப்படாத,) தஸ்ய [தஸ்ய] - அந்த பாலனை பகவானுடைய, (மஹிமையை அதிசயிப்பதைப்பற்றி) கா கதா [கா கதா]-(மனோராஜ்யத்திலாவது) கூடுமோ. (பேசக்கூடுமோ.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- தன் யாகத்தை வெள்ளம் இடுகையில் கங்கையைப் பானம் செய்தார் ஜஹ்நு. அது ஓர் அத்புதமஹிமை. அந்த அத்புதத்திலும் அத்புதம் ஸமுத்ரத்தை அகஸ்த்யர் பானம் செய்தது. இதெல்லாம் மனுஷ்யராயிருப்பவர் ஆச்சர்யமான தபோபலத்தால் பெறக்கூடிய சக்தி. இப்படி (ஸம்ஹார) சக்தி பெற்றாலும், ஜீவர்களாயிருப்பவர் தவத்தின் தாரதம்யத்தால் ஒருவருக்கு மேல் ஒருவர் ஸித்திகளைப் பெறலாம்; ஈச்வரனுடைய ஸர்வஜகத்ஸ்ருஷ்டி பாலனஸம்ஹாராதிசக்திகளைப் பெறமுடியுமோ? ஈச்வரனுடைய ஸர்வசக்தியை நாம் அடையக்கூடும் என்று கர்வப்படலாகாது. ஜஹ்நு கங்கையைப் பானம் செய்து, பிறகு பகீரதர் வேண்டுகோளின்படி தன் காதினால் வெளியில் விட்டார். அவர் அத்புதசக்தியால் அவர் கர்வப்படவில்லை. கங்கை முதலிய எல்லா நதிகளுக்கும் பதியான ஸமுத்ரத்தையே அகஸ்த்யர் ஆசமனம் செய்துவிட்டார். ஜஹ்நு சக்தியை அவர் மஹிமை அதிசயித்தது. அகஸ்த்யரும் கர்வப்படவில்லை. அவருக்கு மேல் அந்த ஆச்சர்யசக்தியை உடையவர் ஓர் பாலனாய் ஏழுலகுமுண்டவர். அந்த ஈச்வரனும் கர்வப்படவில்லை. 'ஸர்வமிதம் அப்யாத்தோ அவாகீ' என்றது உபநிஷத்து. முழுஉலகையும் வ்யாபித்தும், தன் பெருமையை நினைக்கவும் பேசவுமில்லை. ஜல்பனம் செய்யவில்லை. கர்வப்படாமல் அடக்கமாக இருப்பதுதான் பெரியோர் லக்ஷணம். சிலரைக் காட்டிலும் நமக்கு அதிகசக்தி முதலியது இருப்பதைக்கொண்டு கர்வப்படுவது உசிதமேயில்லை; நம் தலையை மிதிப்பவர் கோடிப்பேர் உண்டு என்று நினைத்து அடக்கத்தையே பற்றவேண்டும். (18)

தஷ்டஸாரங்கயூதோऽபி தம்ஷ்ட்ராநகரவாநபி |
பூப்ருத்கடகஸம்ஸ்தோऽபி ஸாரமேயோ ந ஸிம்ஹதி ||

தஷ்டஸாரங்கயூதோZபி தம்ஷ்ட்ராநகரவாநபி |
பூப்ருத்கடகஸம்ஸ்தோZபி ஸாரமேயோ ந ஸிம்ஹதி || (18)

(ப-ரை) ஢ஷ்டஸாரஜ்யூதோzபி [தஷ்டஸாரங்கயூதோzபி] - அநேகமான்களைக் கடித்தாலும், (யானைக் குட்டிகளைக் கொன்று தின்றாலும்,) ஢ம்ஷ்ட்ராநகரவாநபி [தம்ஷ்ட்ராநகரவாநபி] - பல்லும் நகமுமிருந்தாலும், ஸுப்ருத்கடகஸம்ஸ்தோzபி [பூப்ருத்கடகஸம்ஸ்தோzபி] - ராஜாவுக்குள் அரண்மனையிலேயோ துருப்பிலேயோ யிருந்தாலும், (மலைச்சாரலிலிருந்தாலும்) ஸாரமேய: [ஸாரமேய:] - நாய், ந ஸிம்ஹதி [ந ஸிம்ஹதி] - ஸிம்மமாக ஆகாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— நாய்க்கு க்ராமஸிம்ஹமென்று பெயர். க்ராமஸிஂஹம் ஸிஂஹமாகுமோ. க்ராமஸிஂஹம் சப்திப்பதைப் பார்த்து ஸிஂஹம் ப்ரதிகர்ஜனை செய்யுமோ என்று ஓர் க்ரந்தத்தில் பேசப்பட்டது. “ந ஹி ருதம் அநுரௌதி க்ராமஸிஂஹஸ்ய ஸிஂஹ:”. பேரில் இப்படி கொஞ்சம் ஒற்றுமையே தவிர, வேறு மூன்று ஒற்றுமைகளை ஒருவாறு காட்டுகிறார். ‘ஸாரங்கம்’ என்பது மான்களுக்கும் பெயர், யானைகளுக்கும் பெயர். ‘யூதம்’ என்றால், கூட்டம். யானைக் கூட்டங்களைப் பிளந்து கொல்லும் ஸிஂஹம். வேட்டையாடுகையில் கிராதர்களோடுகூட இருந்து மான்களை வேட்டைநாய் கடிக்கும். இரண்டும் ஸாரங்கங்களைக் கடிக்கிறதென்கிற ஓர் ஒற்றுமை. இரண்டிற்கும் பற்களும் நகங்களும் உண்டு, ‘தம்ஷ்ட்ராவான், நகரவான்’. ஸிம்ம விஷயத்தில் மட்டும் மதிப்புக்கு அதிசயம் அர்த்தம். ‘பூப்ருத்’ என்பது ராஜாவுக்கும் மலைக்கும் பெயர். ‘கடகம்’ என்பது ராஜதானிக்கும், ஸைந்யமிருக்குமிடத்திற்கும், வேட்டைமுகாமிற்கும் பெயர், மலைச்சாரலுக்கும் பெயர். ஸிம்மம் மலைச்சாரலிலிருக்கும். இப்படி ச்லேஷைகளையினுதவியைக்கொண்டு ஒருவாறு ஒற்றுமை தேடவேணும். ஸிம்ஹம் என்பது கவிஸிஂஹமத்தையும் சொல்லும். க்ஷுத்ர ஸிம்மத்தையும் தார்க்கிகஸிம்மத்தையும் சொல்லும். இன்னும் ஸாரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியவனான ஓர் அஜ்ஞன் ‘ஸாரமேயன்’. அவனுக்கு ஸாரம்இன்னும் ‘மேயம்’. அறியவேண்டியிருப்பது அறியப்படவில்லை. ‘ஸாரங்கம்’ என்பது ஓர் வாத்யத்தைச் சொல்லும். தேனைச் சேர்க்கும் ப்ரமரங்களையும் சொல்லும். நாலு திக்குகளிலும் ஓடி புஷ்பங்களிலிருந்து ஸாரத்தைத் தேனீக்கள் க்ரஹிக்கும். வித்வான்கள் ஸாரத்தை க்ரஹிப்பார்கள்,

இப்படி ஸாரத்தைக் கிரஹிக்காத டாம்பிகமான அஜ்ஞன் ஸாரக்ராஹிகளான ஸாரங்கரைக் கடிப்பான், பற்களாலும் நகங்களாலும் பிடுங்குவான். இருவரும் ராஜஸதஸ்ஸில் வந்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்களுக்குள் ஸபையில் வாதம் நடக்கிறது. வீண் டம்பத்தால் ஓர் பலமும் கிடைக்காது. (18)

ஸத்பதம் ஶாதயந்மித்ரம் அபி வ்யாலஸ்தமோமய: ।
அதீதபர்வா ஜகதாமத்ருஶ்ய: ஸஹஸா பவேத் ॥௧௯॥

ஸத்பதம் சாதயங்மித்ரம் அபி வ்யாலஸ்தமோமய: l
அதீதபர்வா ஜகதாமத்ருச்ய: ஸஹஸா பவேத் ll (19)

(ப-ரை) ஸத்பதம் [ஸத்பதம்] - நன்மார்க்கத்லிருக்கிற, (ஆகாசத்திலிருக்கிற) மித்ரமபி [மித்ரமபி] - ஸ்நேஹிதனையும், (ஸூர்யனையும்,) ஶாதயந் [சாதயந்]- (திரஸ்கரிக்கும்) மறைக்கும், தமோமய: [தமோமய:] - கெட்டதான தமோகுணமே வடிவான, (இருட்டுமயமான, சாயாக்ருஹமான,) வ்யால: [வ்யாள:] - துஷ்டன், (ராஹு) அதீதபர்வா [அதீதபர்வா] தனக்கு வந்த உச்ராயஸமயம் நழுவினதும், (அமாவாஸ்யை பர்வத்தில் க்ரஹணஸமயம் கடந்த உடன்,) ஸஹஸா [ஸஹஸா]-உடனே, ஜகதாம் [ஜகதாம்] - உலகத்திற்கெல்லாம், அத்ருஶ்ய: [அத்ருச்ய:] - பார்க்கத்தகாதவனாக, (கண்ணுக்குத் தெரியாதவனாக,) பவேத் [பவேத்] - ஆவான்.

அவதாரிகைளுடன் தாத்பர்யங்கள்:- தமோகுணம் நிறைந்தோர் தங்களுக்கு அதிகாரம் கிடைத்தபோது, நல்ல மார்க்கத்தில் இருக்கும் ஸ்நேஹிதரையும் கர்வத்தால் திரஸ்கரிப்பார்கள். நல்லோரை இருக்குமிடம் தெரியாமல் மறையச்செய்வார். ஸூர்யன்போன்ற தேஜஸ்விகளை மறைப்பார். அவர்களைப் பிரகாசிக்காமற்செய்துவிடுவார்கள். அந்த துஷ்டர்களுக்கு வந்த ஏற்றம் நழுவின உடன், தாங்களே இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போகநேரிடும். அவர்களைப் பார்ப்பதே பாபம் என்று உலகமெல்லாம் அவர்களை நீக்கி வெளியே துரத்திவிடுகிறார்கள். இதற்கு ராஹு என்னும் இருட்டு க்ருஹமே த்ருஷ்டாந்தம். ‘மித்ரம்’ என்பது ஸூர்யனுக்கும் ஸ்நேஹிதனுக்கும் பெயர். அமாவாஸ்

யையிருட்டில் கருப்பான (க்ருஷ்ண) ஸர்ப்பம் நடக்கும் மார்க்கத்தில் குறுக்கே படுத்திருக்கும். பர்வஇருட்டுப் போனதும், ஒருவர் கண்ணிலும் படாமல் ஓடிப்போம். (19)

துர்யாணுமபி ஸத்கார்யே குணசாலிவிமர்திநும் ।
அநுகமவிதாம் யுக்தமபநீதேர்நிவாரணம் ॥ (20)

(ப-ரை) ஸத்கார்யே [ஸத்கார்யே] - நல்ல கார்யத்தில், (அறுக்கும் தாந்யங்களை வண்டிகளில் சுமந்து இழுத்துப்போகும் நற்கார்யத்தில்) துர்யாணாமபி [துர்யாணுமபி] - நிர்வஹிக்கும் துரந்தரராயிருந்தும், (குதிரைகள் அல்லது எருதுகளாயிருந்தும்,) அநாகமவிதாம் [அநுகமவிதாம்] - (ஸொத்து பாத்தியத்திற்கு யாதொரு தஸ்தாவேஜு ஆதாரமில்லாமல் அனுபவித்து வரும் பாத்தியம் மட்டும் உள்ளவருமான) சாஸ்த்ரம் தெரியாதவருமான, (லாபத்தை அறியாதவையுமான) குணசாலிவிமர்திநாம் [குணசாலிவிமர்திநும்] - ஸொத்து பாத்தியமுள்ளவர்களை ஹிம்ஸித்து துராக்ரமமாய் அநுபவிப்பவர்களை (நல்மார்கத்திலுள்ளவரை ஹிம்ஸிப்பவரை, நன்றாய் விளைந்திருக்கும் தாந்யக் கதிர்களை மிதித்தும் தின்றும் அழிப்பவற்றை) அபநீதே: [அபநீதே:] - அந்யாயத்திலிருந்து, வெளியே ஓட்டிப்போவதால், நிவாரணம் [நிவாரணம்] - தடுப்பது, யுக்தம் [யுக்தம்] - ந்யாயம்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- ந்யாயாதிகாரம் முதலிய அதிகாரத்திலிருப்பவர்கள் தர்மசாஸ்த்ரமறிந்தவராயிருக்க வேண்டும்; கேவலம் துராக்ரமபலத்தை முன்னிட்டுப் பிறர் ஸொத்தை அநுபவித்துக்கொண்டு ஸாதுக்களை ஹிம்ஸிப்பவர்களை வெளியில் அப்புறப்படுத்தி, ஸொத்தை உடையவனுக்கு வாங்கிக் கொடுக்கவேணும்; அந்யாயத்தைத் தடுக்கவேணும். திமிருள்ளவர்கள் தர்ப்பத்தால் (கொழுப்பால்) ஸாதுக்களான குணசாலிகளின் சொத்தை ஆக்ரமித்தநுபவிப்பர்; அதிகாரத்திலிருப்பவர், அதிகாரச் செல்வாக்கைக்கொண்டு அப்படி ஸாதுக்கள்

சொத்தைப்பிடுங்கி அநுபவிப்பதுண்டு. மேலதிகாரிகள் அந்த அந்யாயங்களைத் தடுத்து ஆக்ரமித்தவரை அப்புறப்படுத்தவேணும். தர்மசாஸ்திரம் தெரியாமல் கீழ்அதிகாரிகள் செய்த அந்யாயத் தீர்ப்புகளை மேலதிகாரிகள் மாற்றி அந்யாயத்தைத் தடுக்க வேணும். 'ஆகமம்' என்று க்ரயசாஸனம், தானசாஸனம் இதற்குப் பெயர். சாஸனமில்லாமல் ஆக்ரமித்து அநுபவிப்பது போகம். அப்படி தஸ்தாவேஜில்லாமல் அக்ரமமாயநுபவிப்பது தர்மசாஸ்திரப்படி தகப்பனுர் பாட்டனுர் காலம்முதலில்லாமல் நாமாக எத்தனை வருஷமநுபவித்தாலும் தஸ்தாவேஜுப்படி பாத்யஸ்தனுக்கு விரோதமாகச் செல்லாது. 'தஸ்தாவேஜு பாத்யமில்லாமல் அநுபவம் மட்டும் ப்ரமாணமாகாது' என்று நாரதஸ்ம்ருதி. குதிரைகளும் மாடுகளும் வண்டிகளை இழுக்கும் 'துர்யங்கள்'. வேளாண்மைக்காரர்களுக்கும் வண்டிகளும் மாடுகளும் அவச்யம் வேண்டியதுதான். ஆயினும் மாடுகளும் குதிரைகளும் நல்ல சதிர்வயல்களில் புகுந்து கதிர்களை மிதித்துத்தள்ளி மேய்ந்தால் அவற்றை அடிக்காமல் காயப்படுத்தாமல் வெளியே கொண்டு போய் விடவேணும். அவை தின்பது கொஞ்சம், மிதித்துஅழிப்பது அதிகம். 'அநாகமவிதாம்' அவற்றிற்கு தான்யலாபத்தின் அருமையும் தான்யச்சேதம்இவ்வளவென்றுந் தெரியாது. (உப்தமான) கொண்டிமாடுகள் விளைச்சல்களை அழிக்கும்; குணசாலிகள் சொத்துக்களைத் திமிர்பிடித்தவர் ஆக்ரமிப்பர். (20)

பலோத்தரேண ஹரிணு நாகமல்லவிபேதிநா ।
ஸ்ருகால: ஸாம்யமாகாங்க்ஷந் சௌர்யாதிக்யம் ந விந்ததி ॥

(ப-ரை) பலோத்தரேண [பலோத்தரேண] - பலராமருக்குத் தம்பியான, அதிக பலமுடைய, நாகமல்லவிபேதிநா [நாகமல்லவிபேதிநா] - குவலயாபீடமென்னும் யானை, சாணூரர் முதலிய மல்லர் இவர்களைப்பிளந்த (பலிஷ்டமான யானையை) பிளக்கும், ஹரிணா [ஹரிணு] - கிருஷ்ணனோடு, ஸிம்ஹத்தோடு, ஸ்ருகால: [ஸ்ருகால:] - (ஓர் துஷ்டதூஷகனை பௌண்ட்ரகன்) நரி, ஸாம்யம் [ஸாம்யம்] - ஸமத்வத்தை,

ஆகாங்க்ஷந் [ஆகாங்க்ஷன்] - ஆசைப்பட்டும், ஸௌர்யாதிக்யம் [ஸௌர்யாதிக்யம்] - சௌரியென்னும் கண்ணனுடைய உயர்த்தியை (உயர்ந்த சூரத்தனத்தை), ந விந்ததி [ந விந்ததி] - அடைகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கர்வத்தால் உயர்ந்தவர்களோடு போட்டிபோட்டு அவர்களைப்போலாக ஆசைப்பட்டால், அந்த ஆசை வீணையாகும். சிசுபாலனை ருக்மிணி, நரிக்கு உவமையிட்டாள். நரி ஸிம்ஹத்தின் தோலைப் போர்த்திக்கொண்டு ஸிம்ஹமாக ஆசைப்பட்ட கதையை இங்கே நினைக்கிறார். (21)

ஸுதர்சனப்ருதா கச்சித் அஜஹத் கீர்த்திமத்ஸர: ।
மஹாசாந்தபதாகர்ஷீ ஜலஜந்துர்நிக்ருஹ்யதே ॥ ௨௨ ॥

ஸுதர்சனப்ருதா கச்சித் அஜஹத் கீர்த்திமத்ஸர: ।
மஹாசாந்தபதாகர்ஷீ ஜலஜந்துர்நிக்ருஹ்யதே ॥ (22)

(ப-ரை) அஜஹத்கீர்த்திமத்ஸர: [அஜஹத்கீர்த்திமத்ஸர:] - சேருள்ள குளத்தை விடாததும், (நல்ல தர்சனத்தின் கீர்த்தியில் மத்ஸரமென்னும் அஸூயையை விடாதவனும்), மஹாசாந்தபதாகர்ஷீ [மஹாசாந்தபதாகர்ஷீ] - பரம சாந்தரான கஜேந்திராழ்வாருடைய காலை இழுத்து, (ரொம்பவும் ஸாதுவாயிருப்பவருடைய நல்ல மதத்திலிருப்பை இழுக்கப்பார்க்கும், பரம சாந்தரென்று பரமஹம்ஸப் பெயரை இழுத்துவைத்துக்கொண்டு) கச்சித் [கச்சித்] - ஒரு, ஜலஜந்து: [ஜலஜந்து:] - ஜலத்திலுள்ள முதலை, (ஜடனான புறச்சமயத்தன்,) ஸுதர்சனப்ருதா [ஸுதர்சனப்ருதா] - சக்ரபாணியால், (நல்ல தர்சனத்தைப்பரிக்கும் சக்ராங்கிதப் பெரியோரால்) நிக்ருஹ்யதே [நிக்ருஹ்யதே] - நிக்ரஹிக்கப்படுகிறான் (தன்மதம் தப்பென்று கண்டித்து அடக்கப்படுகிறான்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- 'கீர்த்தி' என்பது சேற்றையும்கீர்த்தியையும் சொல்லும். 'சேரோடுகூடிய ஸரஸைவிடாத முதலை (ஸ்வமதத்தின் கீர்த்தியில் அஸூயையை விடாதவன்) கஜேந்திராழ்வாரிலும் சாந்தரில்லை; அவர் காலை இழுத்தது முதலை,

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

கோதாஸ்துதி:

॥ கோதாஸ்துதி: ॥

அன்பில், வெ. கோபாலாசார்யஸ்வாமியால்

அருளிச்செய்யப்பட்ட

எளிய தமிழ் வ்யாக்யானத்துடனும்,

மைலாப்பூர் அட்வோகேட்

தி. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி

எழுதிய

முகவுரையுடனும் கூடினது.

ஸ்ரீரங்கம்

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணஸபையாரால்

கும்பகோணம்

ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈச்வர-ஹு திருவாடிப்பூரம்.

1937

விலை] [அணா-12.

89987
சென்னை-600 005.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

முகவுரை.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்திருக்கும் வடமொழி நூற்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து, அவைகளில் அமைந்து கிடக்கும் அழகுகளை எல்லோரும் அறியும்படி சிறு வ்யாக்யானமிட்டுப் பிரசுரம் செய்யவேண்டும் என்று ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையார் மேற்கொண்ட அரும்பெரும் கைங்கரியத்தில் இரண்டாவது வெளியீடாக இந்த ஸ்ரீ கோதாஸ்துதி வ்யாக்யானம் இப்பொழுது பூர்த்தியாகியிருக்கிறது. சென்ற ஸம்வத்ஸரத்தில் "ஸ்ரீ தயாசதகம்" என்னும் ஸ்தோத்திரம் வெளிவந்தது. இந்த ஸம்வத்ஸரத்தில் "ஸ்ரீ கோதாஸ்துதி". முதலில் தயாதேவி; அடுத்தபடியாய் க்ஷமாதேவி. எம்பெருமானுடைய தயையும் க்ஷமையுந்தான் நமக்குப் பரமோபஜீவ்யங்கள். க்ஷமை என்றால் பொறுமை. க்ஷமையென்று ஸ்ரீ பூமிதேவிக்கும் பெயர். பூமிதேவியின் அம்சம் ஆண்டாள். தயை ஒரு புறமும் க்ஷமை ஒரு புறமுமாக நம்மைக் காப்பவை ஆதலால் ஆண்டாள் இல்லாவிடில் நம் விஷயத்தில் எம்பெருமான் திருமுக மண்டலம் வேறு புறம் திருப்பப்பட்டேயிருக்கும் என்று ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்கிறார்.

ஆண்டாளுடைய பெருமை அளவற்றது. எம்பெருமானுடைய பக்தியில் ஆழ்வார்களில் ஒருவராயும், அவனுடைய தேவிமார்களில் ஒருவராயும் இருக்கும் இருப்பு அஸாதாரணம். ஆழ்வாராய்க்கொண்டு பாமாலை சூட்டியும் தேவியாய்க்கொண்டு பூமாலை சூட்டியும் அநுபவித்த அநுபவம் ஆண்டாள் ஒருவருடையதே. பாமாலை சூட்டிய தேவியும் இல்லை. பூமாலையைத் தாம் சூடிப் பெருமாளுக்குச் சூட்டிய ஆழ்வாருமில்லை. ஆதலால்தான் மஹரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் எத்தனை வாசியோ அத்தனை வாசி ஆழ்வார்களுக்கும் ஆண்டாளுக்கும் என்று பூர்வாசாரியர்கள் வியந்து போந்தார்கள். ஆண்டாளுடைய இவ்வொப்பற்ற மேன்மையைக் குறித்துத்தான் ஆண்டாள் விஷயமாக ஸ்வாமி தேசிகன் தனிப்பட ஒரு ஸ்தோத்திரமருளிச்செய்தபடி.

ஸ்ரீ கோதாஸ்துதியின் சொற்சுவையும் பொருட்சுவையும் படித்தநுபவித்தவர்களுக்கே தெரியும். ஆண்டாளுடைய வ்ருத்தாந்தம் எவ்வளவு மனதைக்கவரவல்லதோ அவ்வளவு ரம்யமாய்

வஸந்த திலக வ்ருத்தத்தில் "[illegible]" என்றபடிபடனஞ்செய்வதற்கும் பாடுவதற்கும் இன்பமாய், ஸ்வாமி ப்ரார்த்தித்தபடியே ஆண்டாளுடைய மணிச்சிலம்பின் மிழற்றல் போல் எம்பெருமானுக்கும் நமக்கும் வெகுமனோஜ்ஞமாய் அமைந்துள்ளது. ஸ்வாமி தேசிகனுடைய பக்தி விகஸித்து (மலர்ந்து) அருளிச்செய்யப்பட்ட ப்ரபந்தமாகையால் "[illegible]" என்று அவருடைய மனதையே கவர்வதாயிற்று இந்த ஸ்தோத்திரம்.

இத்தனை பெருமை வாய்ந்த இந்த ஸ்தோத்திரத்தின் அழகுகளை அனுபவிக்கவும் தாம் அனுபவித்தமையைப் பிறருக்கு எடுத்துச்சொல்லி, அவர்களுக்கு அனுபவத்தை யூட்டவும் திறமைவாய்ந்தவரான நம் ஸபாத்யக்ஷர் ஸ்ரீ-உ-வே. அன்பில் வே. கோபாலாசாரியஸ்வாமி தயாசதகத்திற்கு வ்யாக்யானம் செய்தருளியதுபோல் இதற்கும் வ்யாக்யானமிட்டுப் பேருதவி புரிந்திருக்கிற விஷயத்தில் நாம் அனைவரும் க்ருதஜ்ஞர்களாயிருக்க ப்ராப்தம். தமது விஸ்தாரமான படிப்பினாலும், விசாலமான புத்தியாலும், ஸ்வாமி தேசிகனுடைய அந்தரங்கமான திருவுள்ளத்தை அறிந்து அறிவிக்கவல்ல ஸாமர்த்தியம் அந்த ஸ்வாமிக்கு உண்டு என்பதை எல்லோரும் அறிவார்கள். வேதாந்த விஷயமோ ஸித்தாந்த விஷயமோ, காவிய ரஸமோ, கவிஹ்ருதயமோ எல்லாவற்றையும் ஸுலபமாய் எடுத்துக் காட்டியிருக்குமழகை இந்தப் புத்தகத்தில் அங்கங்கே காணலாம். கோதை விஷயமான ஸ்தோத்திரமாகையால் ஸ்திரீகள் பேச்சைப்போலவே பல சொற்கள் நிரம்பியிருக்கின்றன வ்யாக்யானத்தில். எல்லோரும் முழுவதும் படித்து ஆனந்திக்கவேண்டுமென்பதே அந்த ஸ்வாமி திருவுள்ளமாகையால் நாம் அனைவரும் அவ்வண்ணமே படித்து இன்புறுவதுதான் அந்தஸ்வாமிக்கு நாம்செய்யக்கூடியகைம்மாறு.

இந்த ஸபையின் நோக்கங்கள் பூர்த்தியாகி ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகள் நாடெங்கும் பரவி எல்லோரும் அந்த ஸ்ரீஸூக்திகளின் ரஸாஸ்வாதம் செய்து மகிழவேண்டுமென்று சரண்ய தம்பதிகள் அநுக்ரஹிப்பாராக.

ஈச்வர-ஹு }
ஆடி-மீ 1உ }

தி. ராமஸ்வாமி,
(மைலாப்பூர்.)

அம்மா, பூஜ்யர்களான அந்த மஹாமஹிமையுடைய மநுமாந்தாதாமுதலியவரும் உன்னோடும், தாமரையாளோடும்கூடிய அர்ச்சிக்க யோக்யமான நாதனை நியமங்களில் நிஷ்டராய், வேதமந்த்ரபுஷ்பங்களால் நன்றாகச் சேர்த்து அர்ச்சித்துத் தங்கள் ஆதிராஜ்யத்தை நீடூழிகாலம் அநுபவித்தார்கள்.

அவ:— தமிழ்மறை பாடிய கோதையோடும். லக்ஷ்மீதந்த்ரம் பாடிய லக்ஷ்மியோடும்கூடிய (வேதங்களை மீட்டு உபதேசித்து கீதை பாடிய) மதுஸூதனன் திருமேனியைப் பாதம் பணிபவருக்கு மங்களங்கள் கிடைக்குமென்றார். இச்சேர்த்தியைப்பூஜித்து மநு முதலிய ரவிகுலத்தரசர் தங்கள் ராஜ்யத்தை இவர்களுக்குச் சேஷமாக அநுபவித்தார்கள். மதுஸூதனன் அக்குலகூடஸ்தரான விவஸ்வானென்னும் ஸூர்யனுக்கு மோக்ஷோபாயத்தை உபதேசித்து, அவர் மனுவுக்கு உபதேசித்து, அவர் இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்து இப்படிஉபதேசபரம்பரை வந்ததையும் 'மநு முதலியவர் அர்ச்சித்தார்கள்' என்பதால் காட்டுகிறார். ஸூர்ய குலபரம்பரை, நம் குருபரம்பரை, இச் சேர்த்தியின் சிஷ்யபரம்பரை. திவ்யமிதுநச்சேர்த்தியை மங்களகாமர்கள் ஆத்மஜ்ஞான ஆசார்யராக அர்ச்சிப்பது உசிதம். மநு முதலியவரும் அப்பரம்பரையில் சேர்ந்தவர்கள். மநுகுலமஹீபாலர் உபயநாச்சிமாரோடு கூடிய இப்பெருமாளை அர்ச்சித்தவர். மைதிலீரமணராத்ரத்தால் பெருமாளும் பிராட்டியும் தாமாகிய இச்சேர்த்தியை அர்ச்சித்து ராஜ்யமாண்டார்கள். ஈச்வரமிதுநத்திற்கும் அர்ச்யமும் மங்களமளிப்பதுமான சேர்த்தியிது. 'அங்கம் சேரும் பூமகள் மண்மகளாய்மகள்'.

[illegible]- முன் ச்லோகத்தில் சொன்ன விசிஷ்டம் அர்ச்சிக்கத்தக்கது. அச்சேர்த்தியில் செய்யும் அர்ச்சனை பலத்தையளிக்கும். சேர்த்தியை முன் ச்லோகத்தில் ஸேவித்ததும் உடனே அர்ச்சனை செய்வது உசிதம். அர்ச்சனை செய்வதை உடனே பேசுகிறார்; முதலில் பேசுகிறார்.

[illegible]— நன்றாயர்ச்சித்து. 'ஸம்' என்பதற்கு 'ஒன்று சேர்த்து' என்றும் பொருள். ஒன்று சேர்த்து அர்ச்சிப்பதே சீர். தம்பதிபூஜை.

[illegible]:— பக்தியோகத்திற்குச் சக்தர்களாதலால் ஸகலவைதிகநியமங்களோடுகூட பக்தியை அநுஷ்டிக்கிறார்கள்.

தயை, க்ஷமை, சாந்தி முதலிய ஆத்மகுணநியமங்களான புஷ்பங்களாலும்.

நிகமவநஸுமைஃ— வேதமந்த்ரபுஷ்பங்களால். நிகம கல்பவ்ருக்ஷத்தின் மந்த்ரங்களான புஷ்பங்களால். வேதங்களிலிருந்து பிறந்த (வேதங்கள் சொல்லும்) எல்லா நியமங்களோடும் என்றும் கொள்ளலாம். லகுவான சரணாகதியைக் காட்டிலும் வேற்றுமை. 'நிகமம்' என்னும் கடைவீதி புஷ்பங்களிலும் வைஜாத்யம். நிகமமென்னும் வேதபுஷ்பங்களோடு மற்ற உயர்ந்த புஷ்பங்களும் சேரட்டும்.

நாதம்— திருநாமத்தில் ஏகதேசத்தைச் சொன்னாலும் முழுப்பெயராகும். 'ரங்கநாதன்' என்பதை 'நாதன்' என்கிறார். தேவிமாருக்கு நாதனென்பதையும் காட்டவேணும். 'யாரை அர்ச்சித்து சுபத்தை, மங்களத்தை மானவர்கள் அடையக்கூடும்' என்று தர்மபுத்திரர் பீஷ்மரைக் கேட்டதற்கு 'புண்டரீகாக்ஷனை ஸ்தவங்களால் பக்தியோடு ஸதாகாலமும் அர்ச்சிப்பதிலும் மிக்க தர்மமில்லை. மங்களங்களுக்கெல்லாம் மங்களமும், தைவதங்களுக்கெல்லாம் தைவதமுமான எல்லா உலகத்தாதையான ஜகந்நாதனை ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்வது நலம்' என்று உபதேசித்தார். அந்த 'ஜகந்நாதனை' நாதனென்கிறார். அவர் மங்களமங்களர், தேவதேவனென்றார் முன் ச்லோகத்தில். 'அர்ச்யம்' என்று பீஷ்மர் உபதேசித்த ஸஹஸ்ரநாமார்ச்சனையை இங்கே முதலிலேயே பேசுகிறார். 'ஸ்ரீச: ஸ்ரீத: ஸ்ரீநிவாஸ:' என்று அக்கிழவரும், 'தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு' என்ற உறுதியையே கொண்டவர். 'ஸ்ரீசன்—ஸ்ரீயை அளிப்பவன்'. 'ஸ்ரீத:' என்பதற்கு 'மாங்கள்யத:'—என்பது பொருள். இத்தனையும் ஸ்வாமி நெஞ்சிலோடுகிறது. ரஸிகர் மனதின் ஸம்வாதமே ப்ரமாணம். 'மானவர்கள்' என்றார் தர்மர். மானவர்க்கும் தாதையான மனு முதலியவர் இப்படி அர்ச்சித்து மங்களமடைந்ததை இங்கே பேசுகிறார். 'மனோர்ஜாதா: மானவா:'. நாதம்—ரங்கநாதனை, ஜகந்நாதனை, உங்கள் ப்ராணநாதனை.

த்வயா க்ஷோணயா ச— உங்களிருவரோடு. 'உங்களிருவராலும் நாதன் ஜகந்நாதனாகிறான்' என்னும் ஓர் அந்வயம் சேர்க்கவேணும். 'ச்ரத்தயா தேவோ தேவத்வமச்னுதே', 'ஹ்ரீஸ்ச தே

லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ'. வேதம் ஓதிய க்ரமத்தை அனுஸரித்து பூமியாகிய கோதையை முன்னே வைத்தார். 'கமலயா' என்று 'தாமரையாள் கேள்வன் ஒருவனையே' என்னும் ஆழ்வார் ஸம்ப்ரதாயத்தைக் காட்டுகிறார்.

ஸமேயிவாம்ஸம்— 'ஸம்' என்பது ஏகீகாரம் செய்யும் (ஒன்றாக்கும்) பொருளுடையது. தேவிமாரோடு கூடி ஒன்றேயாகி. விசிஷ்டம் ஒன்றே. இந்த ப்ரயோகம் வைதிகமானது. மந்த்ரபுஷ்பங்களைக்கொண்டு அர்ச்சிக்கும் சேர்த்தியைச் சாந்தஸ ப்ரயோகத்தாலேயே பேசுவதும் அழகு. ப்ரகரணத்திற்கேற்றது. பாலகாண்டம் முடிவில் விவாஹமானதும், ஸீதைகூடிய ராமனை 'தயா ஸமேயிவாந்' என்று ருஷி வர்ணித்ததை இங்கே 'த்வயா ஸமேயிவாந்' என்று பேசுகிறார். இன்னுமொரு ரஸம் உண்டு. "கதா ஸமேஷ்யாமி பரேதந த்வயா ச" என்று லக்ஷ்மணனைப் பார்த்து பேசினவிடத்தில்போல பிரியாமல் கூடவேயிருக்கும் லக்ஷ்மியும் கோதையோடுகூடச் சேருங்கால் ஓர் புதுச் சேர்த்திபோலாகிறாளென்பது ரஸம். கோதைகல்யாணம் லக்ஷ்மீ கல்யாணமுமாகிறது.

பிதரம்— எல்லா ப்ராணிகளுக்கும் அவ்யயமான பிதா. 'நாம் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்தாலும் அவன் மாறாத பிதா'. அப் பிதாவுக்குப் பத்நியான நீ எல்லோருக்கும் தாய் என்பதில் என்ன தடை?

சிரம்— தீர்க்ககாலம். உங்கள் சேர்த்தியை அர்ச்சித்துக் கொண்டேயிருந்தால் இம் மண்ணுலகும் பொன்னுலகே. அயோத்திமாநகரும் திருவிண்ணகரான அயோத்தியே.

நிரவிசந்- ஸம்பூர்ணமாய் அநுபவித்தார்கள்.

நிஜம் ஸ்வராஜ்யம்— அவர்கள் ராஜ்யம் [illegible]வாதிகமான அகண்டபூமண்டலாதிராஜ்யம். அது அவர்களுக்கு ஸொந்தமாயினும், "ஸகலம் தத்தி தவைவ மாதவ" 'உன் சேஷித்வவிபவத்திற்கு வெளிப்பட்டதைக் கண்ணெடுத்தும் பாரேன்' என்றபடி உங்களுக்குச் சேஷமாக அனுபவித்து இன்புற்றார்கள்.

மாந்யா மநுப்ரப்ருதயோऽபி மஹீக்ஷிதஸ்தே— பூஜ்யர்களான மனு, இக்ஷ்வாகு முதலியவர்கள் பூஜித்தார்கள். "மநு

[illegible]'', [illegible] ''என்ற காளிதாஸச்லோகங்கள் இங்கே ஸ்வாமி நெஞ்சிலோடுவது திண்ணம். அதே. பதங்களை அமைத்துளது. 'செழு மறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்' என்னுமதும் காளிதாஸர் த்ருஷ்டாந்தப் பணிப்புக்குச் சேரும். ரங்கம் ப்ரணவம். 'மனு சொன்னதெல்லாம் ஔஷதம்'என்றது வேதம். மனு ஆசிரியர் இச்சேர்த்தியைத் தாம்அர்ச்சித்து அவ்வாசாரத்தில் நம்மை நிலைநாட்டுகிறார். 'ஆசாரே ஸ்தாபயதி ஸ்வயம் ஆசரதே'. (23)

ஆர்த்ராபராதிநி ஜநேऽப்யபிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே ।
பார்ச்வே பரத்ர பவதீ யதி தஸ்ய ந ஸ்யாத்
ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திதம் ஸ்யாத் ॥ ௨௪ ॥

ஆர்த்ராபராதிநி ஜநேzப்யபிரக்ஷணார்த்தம்
ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமானே ।
பார்ச்வே பரத்ர பவதீ யதி தஸ்ய ந ஸ்யாத்
ப்ராயேண தேவி வதனம் பரிவர்த்திதம் ஸ்யாத் ॥

(ப-ரை) தேவி - கோதாதேவியே! ஆர்த்ராபராதிநி- பச்சையான அபராதத்தைச் செய்து ஈரங்காயாத, ஜநே - ஜனத்தை, அபிரக்ஷணார்த்தம்- நன்றாய் உஜ்ஜீவிப்பித்துக்காக்க, ரமயா - லக்ஷ்மீதேவியால், ரங்கேச்வரஸ்ய - ரங்கநாதனுக்கு, விநிவேத்யமாநே - சிபார்சு செய்யும்போது, தஸ்ய - அவருடைய, பரத்ர பார்ச்வே - மற்றோர் பக்கத்தில், பவதீ - நீர், யதி ந ஸ்யாத் - இல்லாமற்போனால், வதநம் - அவருடைய திருமுகம், ப்ராயேண - அநேகமாக (மிகவும்), பரிவர்த்திதம் ஸ்யாத் - திரும்பியேயிருக்கும்.

பிழைப்பதையே ஸ்வபாவமாகவுடைய நாங்கள் குற்றங்கள் இன்னமுலராமல் ஈரமாய்ப் புதியதாயிருக்கையிலேயே, உன்னைப் புருஷகாரமாகப் பணிந்ததும். எங்களை ரங்கேச்வரனுக்குச் சிபார்சு செய்யும்போது அவருக்கு மற்றொரு பக்கத்தில் நீ இல்லாமற்போனால், அவர் முகம் (அந்தப் பக்கத்தில்) திரும்பியேயிருக்கும்.

அவ:— (1) மனுமுதலியவர்கள் சக்தர்கள்; பக்தியோகநிஷ்டர்கள். வேதநியமங்களையெல்லாம் அநுஷ்டித்து உபாஸனத்தை சமதமாதிகுணபூர்ணராய் அனுஷ்டித்தார்கள். மாந்யரான அவர்களுக்கு இச்சேர்த்தி உபாஸ்யம். அசக்தர்களான பேதை ஜநங்களுக்கு இச்சேர்த்தி ப்ரபத்தவ்யம். பெரியபிராட்டியாரே புருஷகாரமாவதற்காக அத்தாயைச் சரணம் புகுந்ததும் அன்று செய்த புதுக்குற்றங்களையும் கவனியாது பெருமாளுக்குச்சிபார்சு செய்கிறாள். 'மாதர் மைதிலி' என்ற ச்லோகத்தில் 'ஆர்த்ராபராதா:' என்று ராக்ஷஸிகளைப் பட்டர் வர்ணித்தது நெஞ்சிலோடுகிறது.

(2) தேவிமாரிருவரோடும் ஒன்றாகக் கூடினார் என்றார் முன் ச்லோகத்தில். ஒருவனுமொருத்தியும் ஒன்றுகூடி ஒற்றிருக்கலாம். பார்யாத்வயமெப்படி ஸர்வதாவும் ஒன்றுகூடி ஒன்றாயிருப்பது. 'அநேக ஸபத்னிகள் வெவ்வேறு திக்குகளில் க்ருஹபதியை இழுத்து ஹிம்ஸிப்பதுபோல' என்றாரே சுகர். பெருமான் இரண்டுபத்நிகளிடமும் ப்ரியமாயிருக்கட்டும்; பத்நிகளொருவருக்கு ஒருவர் கலஹப்படாரோ? பத்நியால் பெரியபிராட்டியாருக்குச் சிறந்த பக்கபலமேற்படுகிறதென்று அழகாக வர்ணிக்கிறார். அற்புதமான ரஸங்களுள்ளதைக் காட்டுவோம்.

ஆர்த்ராபராதிநி அபி— நெஞ்சில் ஈரமில்லை. ஈரச் சொற்களான ஆழ்வார்கள் தேன் மொழிகளை ரஸிப்பதில்லை. நெஞ்சு சுஷ்கசுஷ்கம். மனோவாக்காயங்களால் புதிது புதிதாய்க் குற்றங்களைச் செய்தவண்ணமாயுள்ளோம். அபராதம் செய்த கையீரமுலருவதன் முன்னமே அம்மா காப்பாற்றென்கிறோம். அப்படிக்கொத்த நம்மையும்.

ஜநே- அசோகவனத்து ராக்ஷஸிகளைப்போன்ற ஜனமாயினும்.

அபிரக்ஷணார்த்தம்— நன்[redacted]முகமாக்கி ஸர்வோத்க்ருஷ்டமான ரக்ஷணத்தைச் செய்யவேண்டுமென்று. ஆபிமுக்யத்தை யளித்து ஸ்வஜனமாக்கிக்கொள்ளவேண்டும் என்று. 'ஸ்வஜநயஸி' (ஸ்வஜனமாக்குகிறாய்) என்ற பட்டரநுபவத்தை நினைக்கிறார். அபராதிஜனத்தை விரோதிஜனத்தை ஸ்வஜனமாக்க என்பது கருத்து. இப்படி விரோதி ஜனத்தினிடமும் அபிமுகமாகி

ரக்ஷிக்கப் பிரார்த்திப்பதில், தனக்கே பதியின் ஆபிமுக்யத்தை இழக்கக் கூடிய அபாயம் வருவதாயிருக்கிறதென்று இந்த ச்லோகத்தில் அழகாகக் காட்டப்படுகிறது. என் பக்கத்திலிருந்து திருமுகத்தைத் திருப்பி மறுபுறத்தில் அபிமுகமானாலும் ஆகட்டும்; எப்படியாவது குழந்தை விஷயத்தில் அபிமுகரானால் போதும். ஸபத்நியிடம் அபிமுகமாகத் திரும்பினாலும் திரும்பட்டும். நான் குழந்தையைக் காப்பாற்றச் சிபார்சு செய்தே தீருவேன்.

ரங்கேஶ்வரஸ்ய— ப்ரணவப்ரதிபாத்யமான ஸர்வேச்வரன். ஈச்வரனென்றதால் ஸம்ஸாரதந்த்ரத்தை வஹிப்பதில் தண்டதரத்வநியமத்தைக் காட்டுகிறது. பத்நீ வல்லபைதான்; ஆயினும் ஸாம்யநிலையை விடலாமோ, வைஷம்யத்தையும் பக்ஷபாதத்தையும் ஈச்வரன் பெண்டாட்டி பேச்சிற்காகக் கைப்பற்றலாமோ ? இந்த க்ஷணத்திலேயே செய்த ஈரமான (புது) அபராதத்தோடே என்னெதிரிலிருக்கிற விரோதிஜனத்தை ஈச்வரனான நான் தண்டிக்கவேண்டாவோ ?

ரமயா— ஈஶ்வரனானாலென்ன ? பத்நியின் போகமயக்குகளில் மயங்குபவன்தான். ரமையின் வால்லப்யத்தை மறுக்க முடியுமோ ? இவள்முகத்தைப் பார்த்துக்கொண்டு அங்குள்ள இங்கிதபராதீனனாய் ஜகத் ஸ்ருஷ்டி, மோக்ஷம் முதலியதைச் செய்பவனாயிற்றே.

விநிவேத்யமாநே— பலமாகச் சிபார்சு செய்யப்படும்பொழுது. 'வி' என்பது 'விசேஷமாக, அநேகமாக, வற்புறுத்தி' என்பதைச் சொல்லுகிறது. அபராதம் பச்சை, கொடிய விரோதிஜனம், இவனை அங்கீகரிப்பது கஷ்டமென்று சிபார்சு மிக்க பலமாகச் செய்யப்படுகிறது. 'நிவேதயத மாம்' என்று விபீஷணாழ்வார் போலன்று. 'விநிவேதனம்' வேணும்.

பார்ஶ்வே பரத்ர—மற்றோர் பக்கத்தில், எதிர்ப்பக்கத்தில். கோதைப் பிராட்டி பெரிய பிராட்டியாருக்குப் பலமான பக்க பலமாகிறாளென்பதைக் காட்டவேண்டும். தன் பக்கத்தில் இல்லாமல் எதிர்ப் பக்கத்தில், அப்பக்கத்தில், அப்பாலிருந்தும், உயர்ந்த பக்க பலமாகிறாளென்பது அழகு. 'பார்ச்வபலம்-பக்கபலம்' என்பர். எதிர்ப்பக்கம் தன் பக்கமாயிற்று. ஸபத்நிகள் ஒரு பக்கமாயிருப்பரோ, கிழக்கும் மேற்குமாயிருப்பர், இருக்கிறார்கள். எழுந்தருளியிருக்கிற பக்கம் வேறாயினும், இருவருக்கும் ஒரே பக்ஷமென்பது அழகு. இரண்டு தாய்களுக்கும் இந்தத் துஷ்டப்பையல் பெற்ற பிள்ளையாகிறான். அவனை மன்னித்து அவனைச் சேர்த்துக்கொள்ளுவது இருவருக்கும் ஒரே பக்ஷமே. கோதை எதிர்ப்பக்கத்தில் இருப்பதும், பெரியபிராட்டியாரிடம் பெருமாளுடைய ஆபிமுக்யம் தவறக்கூடாதென்பதற்கும், தானிருக்கும் பக்கம் திரும்பாமல், லக்ஷ்மீதேவியையே பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்றே எதிர்ப்பக்கத்திலிருப்பது. லக்ஷ்மியோடு ஒரே பார்ச்வத்திலிருந்தால் லக்ஷ்மிக்குப் பக்கபலமேற்படாது.

ஸதீ— இப்படி அற்புதமான ஸபத்நீஸ்நேஹத்தையுடைய நீ பூஜ்யை என்பதில் என்ன தடை ?

யதி தத்ர ந ஸ்யா:— அந்த இடத்தில், அந்த ஸந்தர்பத்தில். 'தத்ர' அவ்விடத்தில் என்றும், 'பரத்ர' மற்றோர் இடத்தில் என்றும், இருக்குமிடத்தில் சப்தமாத்ரத்தால் விரோதம் காட்டுவது ஓரழகு. இருப்பது அப்புறம், கருத்து இப்புறம்.

ப்ராயேண— அநேகமாய்.

தேவி— விளையாடும் சீலமுடையவளே ! ரங்கமெனும் நாடகசாலையில் ஈஶ்வரன் முன் அவன் ஸ்வாதந்த்ரியத்தைக் குலைத்து, தேவிமாரிருவரும் என்ன நடிக்கிறீர்களம்மா !

வக்த்ரம்- 'மோக்ஷயிஷ்யாமி' 'உன் பரத்தை ஏற்போம்' என்று பேசவேண்டிய முகமாயிற்றே. முகத்தைத் திருப்பிக்கொண்டால் அநுக்ரஹப்பேச்சுக்கிடமேது. ப்ரணவரங்கத்தில் 'ஓம்' என்று பேசவேண்டுமே.

பரிவர்த்திதம் ஸ்யாத்— அப்புறத்தில், பரத்ர, பார்ச்வத்தில் திரும்பியிருக்கும். அப்புறம் காலியாயிருந்தால், ஸபத்நியாகிய நீ இல்லாவிடில், அப்புறமே திரும்பியிருக்கும். குழந்தைக்குச் சிபார்சு செய்து அவனைக் காப்பாற்ற நீ எதிர்ப்பக்கத்திலிருந்து இப்படி லக்ஷ்மீதேவிக்குப் பக்கபலமாகிறாய். உன் பக்கம் திரும்பினால் லக்ஷ்மியின் கருணைக்குக் குறையாமலோ மேற்பட்டோ உன் கருணையிருக்கிறது. அங்கீகரிக்க ஏன் இத்தனை

தாமதமென்று உன் முகஜாடை. பெருமாள் உன் பக்கம் திரும்பினால், லக்ஷ்மி சொன்னதைக் கேட்காவிடில் உன் முகத்தை அப்புறம் திருப்ப நேரும். நீ லக்ஷ்மிதேவியையே பார்த்துக்கொண்டு அவள் கக்ஷியிலிருக்கிறாய். (25)

𑌗𑍋𑌦𑍇 𑌗𑍁𑌣𑍈𑌰𑌪𑌨𑌯𑌨𑍍 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑍍
𑌭𑍍𑌰𑍂𑌕𑍍𑌷𑍇𑌪 𑌏𑌵 𑌤𑌵 𑌭𑍋𑌗𑌰𑌸𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌃 ।
𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌬𑌦𑍍𑌧𑌫𑌲𑌦𑌾𑌨𑌰𑌤𑌸𑍍𑌯 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃
𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌹𑌮𑌰𑍍𑌮𑌭𑌿𑌦𑌾𑌨𑌿𑌦𑌾𑌨𑌮𑍍 ॥ ௨௫ ॥

கோதே குணைரபநயந் ப்ரணதாபராதாந்
ப்ரூக்ஷேப ஏவ தவ போகரஸாநுகூல: ।
கர்மாநுபத்தபலதாநரதஸ்ய பர்த்து:
ஸ்வாதந்த்ரியதுர்விஷஹமர்மபிதாநிதாநம் ॥ (25)

(பதவுரை) 𑌗𑍋𑌦𑍇 - கோதாய்! 𑌭𑍋𑌗𑌰𑌸𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌃 - இன்பரஸத்திற்கு அநுகூலமான, 𑌤𑌵 - உன்னுடைய, 𑌭𑍍𑌰𑍂𑌕𑍍𑌷𑍇𑌪 𑌏𑌵 - புருவத்தின் அசைப்பே, 𑌗𑍁𑌣𑍈𑌃 - மனோஹரமான உன் விலாஸகுணங்களாலே, 𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑍍 - வணங்கினவர்களின் அபராதங்களை, 𑌅𑌪𑌨𑌯𑌨𑍍 - போக்கிக்கொண்டு, 𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌬𑌦𑍍𑌧𑌫𑌲𑌦𑌾𑌨𑌰𑌤𑌸𑍍𑌯 - செய்த கர்மங்களுக்குத் தக்கபலன்களையளிப்பதிலே ஆஸக்தியுடைய, 𑌭𑌰𑍍𑌤𑍁𑌃 - நாயகனுடைய, 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌹𑌮𑌰𑍍𑌮𑌭𑌿𑌦𑌾𑌨𑌿𑌦𑌾𑌨𑌮𑍍 - ஈச்வரஸ்வாதந்த்ரியமென்னும்பொறுக்கக்கூடாதமர்மஸ்தானப் பிளப்பிற்கு முதற்காரணமாகும்.

கோதாய் இன்பரஸத்திற்கநுகூலமான உன் புருவ அசைப்பே அதன் குணங்களால் ஆச்ரிதரின் குற்றங்களைப் போக்கி, செய்த வினைகளுக்குத் தக்க பலனைக்கொடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ரியத்தின் மர்மச் சேதத்திற்கு முதற்காரணமாகும்.

அவ:— 'இடது பக்கத்திலேயே அவன் முகம் திரும்பியிருந்துவிடும்' என்று முன் ச்லோகத்தில் ஸாதித்தார். அதனால் கோதை அங்கேயிருப்பதால், அங்கே திரும்புவதில்லையோ. கோதையை அபிமுகமாகப் பார்த்து அவள் அழகிலும் முகவிலா ஸங்களிலும் ரஸிப்பதில்லையோ என்கிற சங்கைவரக்கூடும். அந்த சங்கையைப் போக்குகிறார். உங்கள் சேர்த்தியில் வந்து ப்ரணாமம் பண்ணுகிறவர்களுக்கு தம்பதிச்சேர்த்தி அவஸரத்திற்குத் தக்கபடி தம்பதிகள் பலதானம் செய்யவேண்டும். பலதானம் செய்யும்பொழுது தானம் வாங்குகிறவர்களின் குற்றங்களைப் பரிசீலனம் செய்யமாட்டார். சேர்த்திஸந்தோஷத்திற்கேற்றபடி அர்த்திகளுக்கெல்லாம் பலதானம் செய்வர். வதுவைச் சேர்ந்த அவள் அநுபந்திகள் குற்றமுடையாராயினும், வதுவின் குணங்களையும் அவள் அநுபந்திகளென்பதையும் நோக்கி அவர்களுக்கு உயர்ந்த பலன்களைத் தானம் செய்வர்.

𑌗𑍋𑌦𑍇— கோதாய்!

𑌗𑍁𑌣𑍈𑌃 (𑌤𑌵)— உன்னுடைய குணங்களால். 'செய்த பாபங்களைத் தர்மத்தால் (ஸுக்ருதங்களால், குணங்களால்) போக்கலாம்' என்று வேதமோதுகிறது. உன்னை ஆச்ரயித்தவர்களின் பாபங்களை அவர்கள் தங்கள் குணங்களால் போக்காவிடினும் உன்னுடைய குணங்களால் நீ போக்குகிறாய். பெருமாள் உபேக்ஷிக்கும்படி செய்கிறாய். உன் ஆச்ரிதர் குணங்களாலென்ன, உன் குணங்களாலென்ன.

𑌪𑍍𑌰𑌣𑌤𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑍍— வணங்கி யாச்ரயித்தவர்களின் அபராதங்களை.

𑌅𑌪𑌨𑌯𑌨𑍍— போக்கிக்கொண்டு. '𑌅𑌪𑌨𑌯𑌤𑌿' என்ற ப்ருதிபதத்தில் உபஸர்கத்தை யநுஸரிக்கிறார்.

𑌤𑌵 𑌭𑍍𑌰𑍂𑌕𑍍𑌷𑍇𑌪 𑌏𑌵- உன் புருவத்தினழகிய அசைப்பே. பெருமானுடைய துர்விஷஹமான நிக்ரஹாஸ்த்ரத்திற்கு ப்ரணதனுடைய அஞ்ஜலி ஓர் ப்ரத்யஸ்த்ரமாகுமென்பர்; அது ப்ரத்யஸ்த்ரமாவதற்கு நிதானம் (மூலகாரணம்) மன்மதனுடைய தனுஸின் வடிவான உன்னுடைய புருவத்தின் வளைத்தலே. அந்த வளைத்தல் அஸ்த்ரக்ஷேபம்போன்றது; பெருமாள் நிக்ரஹாஸ்த்ரத்திற்கு ப்ரத்யஸ்த்ரமாக காமன் வில்போன்ற புருவத்திலிருந்து எய்தப்படுவது. ஆச்ரிதரின் அஞ்ஜலியென்னும் ப்ரத்யஸ்த்ரம், உன்னுடைய இந்த ப்ரத்யஸ்த்ரத்தால் வலிமை பெற்றது.

𑌭𑍋𑌗𑌰𑌸𑌾𑌨𑍁𑌕𑍂𑌲𑌃- உன்னுடைய புருவத்தின் அழகிய அசைப்புகளின் விநோதம், போகரஸத்திற்கு அநுகூலம். லீலாரஸம், போகரஸம் என்று இரண்டுவித ரஸங்கள். பரமபதமென்னும் போகவிபூதிக்குப் புதிய ப்ரணதர்கள் சேர்ந்தால், அந்த ரஸம் இன்னம் வ்ருத்தியாகும். புதிது புதிதாகக் குழந்தைகள் வீடுவந்து சேரச்சேர அதிசயம் அதிகம், இன்பமதிகம். கர்மத்திற்குத்தக்கபடி தண்டனையளிப்பது லீலாரஸத்திற்கு அநுகூலம். ஓர் வணக்கை வ்யாஜமாகக்கொண்டு முன் செய்த கொடுவினைகளை மன்னித்து வீடுசேர்த்துக்கொள்வது போகரஸத்திற்கநுகூலமென்பதும் இங்கே ரஸம். லீலாரஸத்திற்கு எதிர்த்தட்டு போகரஸம். அவர் தண்டனை பலன்களைக் கொடுத்து லீலாரஸத்தைத் தேடுகிறார். 'அது வேண்டாம், என் மனதை அநுஸரிப்பது, என் ப்ருக்ஷேபவிலாஸபோக ரஸத்தை மட்டுமன்று. போகவிபூதிரஸத்தையும் பெருக்கும்' என்று நீ ஸூசிக்கிறாய்.

𑌕𑌰𑍍𑌮𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌫𑌲𑌦𑌾𑌨𑌰𑌤𑌸𑍍𑌯 — எந்த ரதி வேணும். அபராதிகளின் கர்மங்களுக்குத் தக்கபடி தண்டனை பலத்தை அளிப்பதில் ரதி வேணுமா? இந்த உத்தமவதுவின் விலாஸ போகரதி வேணுமா என்ற விகல்பத்தை ஸூசிக்கின்றது 'ரத:' என்கிற சப்தம். தம்பதிகள் சேர்த்தியில் வதூவரர்கள் வதுவின் அநுபந்திகளுக்குப் பலதானம் செய்யாரோ? பலதானம் செய்யும் தம்பதிகள் உயர்ந்த பலன்களைத் தானம்செய்வரோ? அல்லது தண்டனைகளை (ப்ரஹாரங்களை)த் தானம் செய்வரோ? ததீயாராதனை தடியாராதனை ஆகலாமோ? கர்மாநுபந்தர்கள் என்பது பெருமாள் வாதம். 'மதநுபந்தர்கள்' என் திறத்தார் என்று கோதை எதிர்வாதம். எந்த அநுபந்தம் உயர்த்தி? கர்மாநுபந்தமா? உன் அநுபந்தமா? என்று விகல்பம். இங்கே 'அநுபந்த', 'பலதானம்', 'ரத' என்கிற பதங்களால் இந்த ரஸங்கள் ஸூசிதமென்பது ரஸிகமனோவேத்யம்.

𑌭𑌰𑍍𑌤𑍁𑌃- உன்னுடைய பர்த்தாவினுடைய. உலகத்தின் பர்த்தாவினுடைய உலகத்தை ரக்ஷணத்தால் ஹரிக்கவேண்டியவனல்லவோ. ஈச்வரனாயினும் பர்த்தாவுமாவான், ரக்ஷகனுமாவான்.

𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑌸𑌨𑌮𑌰𑍍𑌮𑌭𑌿𑌦𑌾 𑌨𑌿𑌦𑌾𑌨𑌮𑍍 — ஐச்வர்யம் என்பது ஸ்வாதந்த்ரியம்; ஓரிடத்திலிருந்தும் அதற்கு பங்கம்,

வ்யாஹதி வரக்கூடாது. ஐச்வர்யம்தானே ஈச்வரனுக்கு உயிர்நிலையானது. அந்த உயிர் நிலையில் அம்பை க்ஷேபம் செய்து சேதித்தால் ஈச்வரதத்வத்திற்கே அழிவு வருமே என்று சங்கை. 'ஸ்வச்சந்தம் விததாம்யஹம்' என் சந்தப்படிக்கு, என் இஷ்டப்படிக்கு நான் பலன்களை விதிக்கிறேன் என்கிறார் பெருமாள். அது ஈச்வரலக்ஷணமான ஐச்வர்யம். இப்படி 'ஸ்வச்சந்தப்படி' ஸ்வதந்த்ரமாக பலமளிப்பது மேன்மையா? அல்லது உன் சந்தப்படி (பரச்சந்தப்படி) அநுவர்த்திப்பதென்கிற தாக்ஷிண்யம் மேன்மையா? என்று விகல்பம். "நாயகர்களுக்குத் தாக்ஷிண்யம் குலவ்ரதம்" என்பது மாளவிகாக்நிமித்ரத்தில் அக்நிமித்ரர் பேச்சு. கோதையின் சந்தத்தை அநுவர்த்திக்காமற்போனால் நாயகர்களென்னும் பர்த்தாக்களுக்கு உயிர்நிலையான தாக்ஷிண்யம் குலையும். ப்ரணதர்களான அடியாரை ஹரிக்கவேண்டியது பர்த்தாவென்னும் யஜமானனுடைய கடமை. 'சரணாகதரக்ஷணம்' ஓர் உயிர் நிலை. மன்னித்து ரக்ஷிப்பதில் இந்த உயிர் நிலைகள் ரக்ஷிக்கப்படுகின்றன.

𑌰𑌙𑍍𑌗𑍇 𑌤𑌡𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌤𑍋 𑌰𑌮𑌯𑍈𑌵 𑌗𑍋𑌦𑍇
𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌸𑍍𑌯 𑌘𑌟𑌿𑌤𑌾𑌂 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌸𑍁𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 ।
𑌦𑍌𑌰𑍍𑌗𑌤𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑌸𑍁𑌧𑌾𑌨𑌦𑍀𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯 𑌶𑌮𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌚𑌿𑌰𑍇𑌣 𑌤𑌾𑌪𑌾𑌨𑍍 ॥ ௨௬ ॥

189907

ரங்கே தடித்குணவதோ ரமையைவ கோதே
க்ருஷ்ணாம்புதஸ்ய கடிதாம் க்ருபயா ஸுவ்ருஷ்ட்யா ।
தௌர்கத்யதுர்விஷவிநாசஸுதாநதீம் த்வாம்
ஸந்த: ப்ரபத்ய சமயந்த்யசிரேண தாபாந் ॥ (26)

(ப-ரை) 𑌗𑍋𑌦𑍇 - கோதாய்! 𑌰𑌙𑍍𑌗𑍇 - ஸ்ரீரங்கத்திலுள்ள, 𑌰𑌮𑌯𑍈𑌵 - பெரியபிராட்டியாராலேயே, 𑌤𑌡𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌤𑌃 - மின்னற்கொடியோடுகூடிய, 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌦𑌸𑍍𑌯 - கருமேகத்தினுடைய, 𑌕𑍃𑌪𑌯𑌾 - க்ருபையென்னும், 𑌸𑍁𑌵𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 - நல்ல வர்ஷத்தால், 𑌘𑌟𑌿𑌤𑌾𑌂 - 𑌘𑌟𑌨𑍈 செய்யப்பட்ட, 𑌦𑍌𑌰𑍍𑌗𑌤𑍍𑌯𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌷𑌵𑌿𑌨𑌾𑌶𑌸𑍁𑌧𑌾𑌨𑌦𑍀𑌂 - ஸம்ஸாரமென்னும் துர்கதியாகிய கொடிய விஷத்தைப் போக்கும் அம்ருதநதியான, 𑌤𑍍𑌵𑌾𑌂 - உன்னை (உன் திருமொழியை, உன்பாட்டஸா

ஸ்வதியை), ஆவஹ்ய - அவகாஹித்து (சரணம்பற்றி), ஸந்த: - ஸத்துக்கள், க்ஷிப்ரேண - சீக்ரத்தில், தாபாந் - எல்லாத் தாபங்களையும், சமயந்தி - போக்கிக்கொள்ளுகிறார்கள்.

கோதாதேவியே! பெரியோர்கள் ஸ்ரீரங்கத்தில் உள்ளதும், லக்ஷ்மியாகிற மின்னற்கொடியுடன் கூடினதுமானகருத்தமேகத்தினுடைய க்ருபையாகிற நல்ல மழையாலே உண்டாக்கப்பட்டிருக்கிற கெட்ட விஷத்தைப் போக்கடிப்பதில் அமுதநதியான உன்னைச்சரணம் அடைந்து உடனே (ஸம்ஸார) தாபங்களைப் போக்கடிக்கின்றனர்.

அவ:— தன் ப்ரியமான நாயகனை ஈச்வரனுடைய நிரூபகமான ஈச்வரத்வம் ஸ்வாதந்த்ரியமென்னும், உயிர் நிலையைச் சேதிப்பதாகப் பேசப்பட்டது. இது என்ன அழகு? நாயகனுடைய உயிர்மர்மஸ்தானத்தை ஓர் ஸதியானநாயகி பிளப்பளோ? இப்படிப் பேசுவது கோதாஸ்துதியாகுமோ? இதற்குப் பதில் கூறுகிறார். பெருமாள் ஈச்வரஸ்வாதந்த்ரியத்தாலேயே புருஷகாரமான ஆசிரியர்களோடு தம்முடைய க்ருபையால் சேர்த்துவைத்து ப்ரணதியென்னும் வ்யாஜமாத்ரத்தால் ரக்ஷிப்பதென்பதும் ஈச்வரன் திருவுள்ளத்தாலே உள்ளதே. ஆசார்யப்ராப்திக்கும் அவன் க்ருபை வேண்டும். கோதை ஆசார்யத்துவம், புருஷகாரத்துவம். வடகரான ஆசாரியரை வடிப்பித்து வைப்பது ஈச்வர க்ருபை. ஆகையால் தாமே கடிப்பித்து வைக்கும் புருஷகாரஸம்பந்தத்தைக்கொண்டு சேதனர் அபராதங்களை மன்னித்து ரக்ஷிப்பதும் ஓர்விதமாக அவர் ஸ்வாதந்திரியத்தைச் சேர்ந்ததே. ஈச்வரஸ்வாதந்த்ரியமே தண்டனைகளைச் செய்யாமல் ரக்ஷிப்பதற்கும் நிதானமாகிறது. பிராட்டியோடுகூடி அவனே தான் தன்னுடைய ஸ்வாதந்த்ரியத்தால், தன் க்ருபையால், தன் சந்தத்தால் கோதை என்னும் புருஷகாரத்தின் ப்ராப்தியை, ப்ரணதியை கடிப்பித்தான். விபுவின் ஸ்வாதந்த்ரியவிசிஷ்டமான கருணை ரக்ஷணத்திற்கு ஹேது. இப்படிக்கு ஈச்வரன் சந்தமே நிறைவேறுவதால், அவன் ஸ்வச்சந்தத்திற்குக் குறைவில்லை என்கிறார். முன்பு கோதையைப் பல நதிகளாக வர்ணித்தார். இங்கே அவளும் அவள் திருமொழியும் அம்ருதநதீ என்கிறார். விரஜையிலுமுயர்ந்த நதீ.

கோதே— திருமொழி, திருப்பாவை தரும் கோதாய்.

ரங்கே— அரங்கத்தில்.

ரமயிதும்— ரமணத்தைச் செய்விப்பதையே ஸ்வபாவமாகவுடைய லக்ஷ்மியாலேயே. கோதையை ஆசிரியதத்துவமாகச் செய்தது லக்ஷ்மியே.

தடித்குணவத:— மின்னலென்னும் கொடியோடு (குணத்தோடு) கூடியவரான. மேகமும் மின்னலும் கூடினால் குளிர்ந்த வர்ஷமுண்டாகித் தாபங்கள் தீரும். பெருமாளும் பெரியபிராட்டியாரும் சேர்ந்துதான் க்ருபாவர்ஷத்திற்குக்காரணமாவாரென்பதை இது விளக்குகிறது. பெருமாளும் லக்ஷ்மியுமாகச் சேர்ந்து தங்கள் க்ருபாவர்ஷத்தால் கோதை நாய்ச்சியார், அவள் திருமொழி, ஆகிய அம்ருதநதியைகடனை செய்வித்தார்கள்.

க்ருஷ்ணாம்போதஸ்ய— கிருஷ்ணமேகத்தினுடைய.

க்ருபயா— கிருபையினாலே, க்ருபையென்னும்.

ஸுவ்ருஷ்ட்யா— நல்ல வர்ஷத்தாலே.

கடிதாம்— கடனை செய்விக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட. கடகையான உன்னை அடைவிப்பது ஸ்வதந்த்ரேச்வரனாகிய ச்ரிய:பதியின் க்ருபை. கடகப்ராப்தியையும் லக்ஷ்மீவிசிஷ்டமான ஈச்வரனுடைய க்ருபை கடிப்பிக்கும்.

தௌர்கத்யதுர்விஷவிநாசஸுதாநதீம்— 'ஸம்ஸாரம்' என்பதற்கு 'நற்கதி' என்பது சொற்பொருள். அது உண்மையில் துர்கதியே என்பதைக்காட்ட 'தௌர்கத்யம்' என்கிறார். ஸம்ஸாரம் என்பது காலகோடி விஷம். இந்தக் கொடிய விஷத்தால் குழந்தைகள் மூர்ச்சிதராயிருக்கிறார்கள்; அவர்கள் ம்ருதப்ராயராயிருக்கிறார்கள். குழந்தைகளைத் தீண்டிய கொடிய விஷத்தை நாசம் செய்வதிலும் பெருமாளுக்குப் பெரிய பேறுண்டோ? அந்த விஷத்தை அமிர்தநதியாகிய உன்னைச் சரணம்பற்றி உன் அமுதஸரஸ்வதியில் நீராடிப் போக்கலாம். 'பாராசர்யவசஸ்ஸுதையானது ப்ராணன் போய் மூர்ச்சிதரான குழந்தைகளை உயிர்ப்பிக்கும்' என்று ப்ரம்மஸூத்ரங்களை வர்ணித்ததை நினைக்க. அம்ருதத்வப்ரவாஹமான ஸுதாநதியாவாய்.

த்வாம்— உன்னை (உன் தேன்மொழியை).

ஸந்த:— ஸம்ஸாரவிஷமூர்ச்சிதராய் அஸத்ப்ராயராயிருந்தவர் இப்பொழுது உன்னைச் சரணம்பற்றி ஸத்தானார்.

ப்ரபத்ய (ஸந்த:)— உன்னைச் சரணம்பற்றி (ஸத்தானோர்). உன் ஸரஸ்வதியில் நீராடி.

க்ஷிப்ரேண— விரைவில் 'தாவதேவ சிரம்' என்றபடி ப்ராரப்தகர்ம ப்ரயுக்தமான அனேகசரீரங்களின் தாமதமில்லை. உடனே வேண்டுமென்று ஆர்த்தியிருந்தால், உடனே.

தாபாந்— ஸகல ஸம்ஸார தாபங்களையும்.

சமயந்தி— போக்கிக்கொள்ளுகிறார்கள். (26)

ஜாதாபராதமபி மாமநுகம்ப்ய கோதே
கோப்த்ரீ யதி த்வமஸி யுக்தமிதம் பவத்யா: ।
வாத்ஸல்ய நிர்பரதயா ஜநநீ குமாரம்
ஸ்தந்யேந வர்த்தயதி தஷ்டபயோதராபி ॥ ॥ 27 ॥

ஜாதாபராதமபி மாமநுகம்ப்ய கோதே
கோப்த்ரீ யதி த்வமஸி யுக்தமிதம் பவத்யா: I
வாத்ஸல்ய நிர்பரதயா ஜநநீ குமாரம்
ஸ்தந்யேந வர்த்தயதி தஷ்டபயோதராபி II (27)

(ப-ரை) கோதே - கோதையே! த்வம் - நீ, ஜாதாபராதம் அபி - அறிந்தோ அறியாமலோ செய்யப்பட்ட குற்றங்களோடு கூடியிருந்தாலும், மாம் - என்னை, அநுகம்ப்ய - தயவு பண்ணி, கோப்த்ரீ அஸி யதி - ரக்ஷிப்பவளாக ஆகியிருந்தால், இதம் - இவ்விஷயம், பவத்யா: - உனக்கு, யுக்தம் - தகுந்தது. ஜநநீ - தாயாரானவள், குமாரம் - குழந்தையை, தஷ்டபயோதரா அபி - கடித்த முலையையுடையவளாயினும், வாத்ஸல்ய நிர்பரதயா - குழந்தையினிடத்தில் உள்ள ஆசை மிகுதியால், ஸ்தந்யேந - முலைப்பாலினால், வர்த்தயதி - காப்பாற்றுகிறாளன்றோ.

கோதே (நான்) அறிந்தோ அறியாமலோ செய்யப்பட்ட அபராதங்களை உடையவனாயிருந்தாலும் நீ என்னை தயவுபண்ணி ரக்ஷிப்பவளாக ஆவாயேயாகில், இவ்விஷயம் உனக்கு உசிதமே. எப்படித்தாயானவள் குழந்தை தன் முலையை கடித்துவிட்டாலும் அதனிடத்திலுள்ள அன்பினால் அதைத் தன்பாலினால் காப்பாற்றுகிறாளல்லவா; அதுபோல,

அவ:— பெருமாள் குற்றத்திற்குத் தக்கபடி தண்டிக்கிறதென்ற தர்மமுள்ளவரல்லவோ? ஸஹதர்மசரியான கோதையும் அந்த தர்மத்தை அவரோடுகூட அநுஷ்டிக்கவேண்டாவோ என்று சங்கைவரக் கூறுகிறார். அவர் பிதா, நீ மாதா. மாதாவின் வாத்ஸல்யகுணம் உனக்கு ஸஹஜம். புதிதாகச் செய்து இன்னம் ஈரமுலராதவபராதங்களையும் பாராட்டாமல் ஸ்நேஹத்தைப் பெருக்குவது வாத்ஸல்யமாகும். தாய்க்குத் தாய் தர்மம் ப்ரபலம், ஸ்வபாவத்தை ஒருவரும் மீறமுடியாது; ஸ்வதர்மம் ப்ரபலம்; பரதர்மம் பயாவஹம். தாய் ஸ்வபாவத்தை, தாய் தர்மத்தைக் காட்டுகிறார். பர்த்தாவோடு ஸஹதர்மசரியானாலும் மாத்ருத்வத்தை விடுவளோ? ஸ்திரீத்வமே அழியுமே.

கோதே— கோதாய்.

ஜாதாபராதமபி மாம்— (1) அபராதம் நேர்ந்தவனாகிய என்னையும். வேணுமென்று குற்றத்தை நான் செய்தாலும், ஏதோ அறியாமல் குற்றம் நேர்ந்துவிட்டதென்று உன் நினைப்பு என்பதை வ்யஞ்ஜிக்கிறார். 'ஜாத' என்று. 'க்ருதாபராதஸ்ய ச தே' என்று திருவடி ஸுக்ரீவரிடம் பேசியதுபோல 'க்ருத'பதத்தை வைக்கவில்லை.

(2) 'ஜாதன்' என்பது 'ப்ரியமான குழந்தை'யைச் சொல்லும். உன் அருமைக்குழந்தை அறியாமற் குற்றம் செய்துவிட்டதென்று உன் நினைப்பும், பரிவும். 'ஸத்யோ ஜாத:' இன்று ஈன்ற கன்று வத்ஸம், அதனிடம்போல வாத்ஸல்யம். மூன்று மடியில் சொல்லும் 'பூர்ணவாத்ஸல்யத்திற்கு' இந்த 'இன்று பிறந்த கன்று' என்பது ஸமர்த்தகம். ஸத்யோஜாத சிசுவின் அபராதம், கன்று உதைத்தது, கன்றின் பல் மடியில் பட்டது என்று உன் நினைப்பு.

(3) குற்றம் ஈரமாயிருந்தாலும், இப்பொழுதே செய்து இன்னம் உலராமலிருந்தாலும். 'ஆர்த்ராபராதினி ஜநே', 'ஆர்த்ராபராதா: ஸதி:'

அநுகம்ப்ய— என்னிடம் தயவு பண்ணி இரங்கி.

கோப்த்ரீ யதி த்வமஸி— நீ ரக்ஷகையாகிறாயென்பது.

யுக்தமிதம் பவத்யா:— உனக்கு இது ஏற்றதே.

வாத்ஸல்ய நிர்பரதயா— புத்ரஸ்நேஹம் சுமை தாங்காதபடி நிரம்பியிருப்பதால்.

ஸ்தந்யம்— ஸ்நேஹமென்னும் பால் நிரம்பிப் பெருகும் கடுப்பினால்.

ஜநநீ— பெற்ற தாய்.

குமாரம்—(1) இளங்குழந்தை, பச்சைக்குழந்தை என்று தாயின் நினைப்பு என்ன முதிர்ந்த வயதாயினும் தாய்க்குசிசுவே. (2)'ராஜகுமாரன்' ராஜ்யத்திற்கு பட்டப்பிள்ளை என்று நினைப்பு. (3) குமரன் போன்ற குமாரனென்று அருமை. 'குமாரகல்பம் ஸுஷுவே குமாரம்' 'குமரனைப்போன்ற குமாரனைப்பெற்றாள்'.

ஸ்தந்யேந— பாலால் குழந்தையை வளர்க்க, பெருக்க, தனத்தில்தானே பாலுண்டாகும்? ஸ்தனத்தில் குழந்தை பல்லால் கடித்தது. கடித்த இடத்திலிருந்தே பால் சொறிகிறது என்று காட்ட 'ஸ்தந்யம்' என்கிறார்.

வர்த்தயதி—குழந்தையைப்பருக்கச்செய்யவேண்டாவோ? பால் பெருக்கால் குழந்தை பருக்கிறது. பால் ஸ்தனத்தில்தானே பெருகும்? கடித்த இடமென்று அதை விட்டால் பாலுக்கு வேறு இடமேதுளது? வர்த்தயதி என்பதில் மிக்க ரஸமுண்டு. ப்ருஹவ்ருத்தௌ ப்ரும்ஹயதி' என்று பொருள் திருவுள்ளம். ப்ரும்ஹணம் செய்கிறாள், ப்ரஹ்மம்போலச் செய்கிறாள்.

த்விஜபயோதராபி—பல்லால் கடிக்கப்பட்ட தனத்தை யுடையவளானாலும். 'பயோதர' என்னும் பதத்தில் மிக்க ரஸம். 'நீரோ பாலோ நிரம்பிய' தோல்பையைப் பொத்துவிட்டால், ஜலமும் பாலும் ஒழுகி விழாமலிருக்குமோ? விரிவுக்குப் பயந்து ரஸங்களைச் சிறிதே பேசுகிறோம். (27)

ஶதமகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா
ஸ்தநபரநமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து: ।
அளகவிநிஹிதாபி: ஸ்ரக்பிராக்ருஷ்டநாதா
விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந: ॥

சதமகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா
ஸ்தநபரநமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து: 1
அளகவிநிஹிதாபி: ஸ்ரக்பிராக்ருஷ்டநாதா
விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந: 11

(பதவுரை) ஶதமகமணிநீலா - இந்த்ரநீலக்கல்லுபோல நீலமானவளும், சாருகல்ஹாரஹஸ்தா-அழகிய செங்கழனிப்புஷ்பத்தை கையில்கொண்டவளாயும், ஸ்தநபரநமிதாங்கீ-தனத்தின் பரத்தால் சிறிது வணக்கப்பட்ட திருமேனியை உடையவளாயும், ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து: - கனத்த (நிரம்பிய) ஸ்நேஹக் கடலாயும், அளகவிநிஹிதாபி: - கூந்தலில் சூடிய, ஸ்ரக்பி: - மாலைகளால், ஆக்ருஷ்டநாதா-இழுக்கப்பட்ட நாதனோடு கூடியவளாயுமான, விஷ்ணுசித்தாத்மஜா கோதா - பட்டர்பிரான் புத்ரி கோதை, ந: - நமது, ஹ்ருதி - ஹ்ருதயத்தில், விலஸது - விளங்கட்டும்.

இந்த்ரநீலக் கல்லுபோல நீலமானவளும், அழகிய செங்கழுநீர் புஷ்பத்தைக் கையில் கொண்டவளாயும், தனபரத்தால் சிறிது வணங்கின தேஹத்தை உடையவளாயும் கனத்த ஸ்நேஹக் கடலாயும், தன் சிரஸில் சூடிய மாலையால் தன் வசமாக்கப்பட்ட நாதனையுடையவளாயும் பட்டர்பிரான் புத்ரியுமான கோதையானவள் நமது மனதில் விளங்கட்டும்.

அவ:- (1) முதல் ச்லோகத்தில் 'கோதையை'ச் சரணம் புகுகிறேன் என்று அவளைப் பரோக்ஷமாகப் பேசினார். பிறகு 26-ச்லோகங்களில் கோதையை அழைத்து நேருக்கு நேராக ப்ரத்யக்ஷமாகப்பேசினார். தேவியான கோதையைப் பரோக்ஷமாக 'அவள்' 'அவள்' என்று பேசித் துதிப்பது உசிதம். 'பரோக்ஷப்ரியா தேவா:'. மனுஷ்யர்களில் அவதாரம் பண்ணினாலும், கோதை தேவியே. ஆயினும் தாயானதால், தேவியாயிருந்தும் நீ என்று கூப்பிட்டே பேசினார். தேவியாயுமிருப்பதால், உபஸம்ஹாரத்திலும் உபக்ரமத்திலும்(முதலிலும், முடிவிலும்)'அவள்' 'அவள்' என்று பேசுகிறார். முதலிலும் முடிவிலும், ஒரேவிதமாக 'அவள்' என்று பேசுவது தேவீ என்கிற தாத்பர்யத்தைக் காட்டும்.

(2) ஓர் ஆச்சர்ய மூர்த்தியாக ஹ்ருதயத்தில் எப்பொழுதும் த்யானம் செய்யும்படி க்ருபையால் விளங்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார். 'நீளாதுங்கஸ்தநகிரிதடீ' என்னும் தனியன் த்யானச்லோகத்தையும் அநுஸரிக்கிறார். நக்ஷத்ரக்கணக்கான 27-ச்லோகங்களால் துதித்து பாவனை செய்து, இங்கே ஹ்ருதயத்தில் பரமப்ரஸந்நையாய் வீற்றிருப்பதைப் பிரார்த்திக்கிறார்.

ஶதமகமணிநீலா— இந்த்ரநீலம்போல நீலவர்ணமானவள். ஸ்ரீ, பூமி, நீளை என்று மூன்று தேவிமாரில் முதல் ச்லோகத்திலிருவரைப் பேசினர். இங்கே நீளையை சப்தமாத்ரத்தாலேயாயினும் ஒருவாறு குறிக்கிறார். 'நீளா துங்கஸ்தன' என்ற த்யானச்லோகத்திலுள்ள முதற்பதத்தை இங்கும் முதல்பதத்தில் வைக்கிறார் என்றும் ரஸம்.

சாருகல்ஹாரஹஸ்தா— அழகிய 'செங்கழுநீர்ப் பூவைக் கையில் உடையவளாய். 'அவள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் வாய் செங்கழுநீர்' ஆகியதால், அது சாரு(அழகியது). ஸ்வார்ஜிதனத்தில் தன்தோட்டத்தில்தான் வைத்து வளர்ந்த கொடிப் புஷ்பம்.

ஸ்தநதடநமிதாங்கீ— தனபாரத்தால் கொஞ்சம் வணங்கிய காத்திரமுடையவளாய். தனங்களும் கிரிபோன்றன. தனங்களில் வாத்ஸல்யப்பெருக்கால் ஸ்தந்யப் பெருக்கை முன் ச்லோகத்தில் பேசினர். தனத்தின் பாரத்துடன் ஸ்தந்யத்தின் பாரமும் சேர்ந்தது.

ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து:- கனத்த புத்ரஸ்நேஹக்கடல். முன்பு அம்ருதநதீ என்றார். இங்கே ஸ்நேஹக்கடலென்கிறார்.

அலகவிநிஹிதாபி:- கூந்தலில் அழகாகச் சூடிய. (யார் கூந்தலில் என்று குறிப்பிடவில்லை). முதலில் கோதை சூடி பிறகு பெருமான் சூடிய.

ஸ்ரக்பி:- மாலைகளால். 'ஸ்ரஜி' என்று தனியனிலுள்ளது.

ஆக்ருஷ்டநாதா— இழுக்கப்பட்ட நாதனையுடையவளாய். தன்னால் உச்சிஷ்டமான (சூடிய) மாலையால் விலங்கிடப்பட்ட என்று பச்சையாக உன் மேன்மை பேசப்பட்டது. இங்கே கட்டுண்டு இழுக்க இடம் கொடுத்தது குடுமி. விலங்கு போட்டாற்போல சலிக்காமலிருக்கும் பயன் கிடைப்பதைச் சொன்னது தனியன். சிரஸில் விலங்குபோட மாட்டார்கள். 'குடுமியைப் பிடித்துக் கயிறால் இழுக்கப்படுகிறான்' 'குணங்களால் இழுக்கப்படுகிறான்' என்பது இங்கே பேச்சு. சூடிக்கொடுத்த மாலையை முடிமேற்கொண்ட நாதனோடுகூட ஹ்ருதயத்தில் ஸர்வதா ஸேவை ஸாதிக்கவேணும்.

விலஸது— நன்றாய்ப் பிரகாசிக்கட்டும்.

ஹ்ருதி— 'த்யாதம் ஹ்ருதம்புஜே', 'த்ருஷ்டம் ஸ்ரீரங்கயாமுநி'.

கோதா— 'கோதாம் ஶரணம் ப்ரபத்யே' என்பது முதல் ச்லோகத்தின் கடையடி. இங்கேயும் முடிவில் கடைசிப் பாதத்தில் 'கோதா' என்று அமைக்கிறார். அங்கே இரண்டாம் வேற்றுமை. சரணமடைந்ததற்குப் பயனாக அவள் ஸேவை அளிப்பதாலிங்கே முதல் வேற்றுமை.

விஷ்ணுசித்தாத்மஜா— 'ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தந' என்று தொடக்கத்திற்குத் தக்கபடி முடிவு. 'பட்டர்பிரான் கோதை சொன்ன' என்ற திருப்பாவை முடிவையும் இது அநுஸரிக்கிறது. இங்கே 'கோதை பட்டர்பிரான் குமரி' என்ற க்ரமத்தை மாற்றியுளது. அதற்கடியென் ? இங்கே பல விசேஷணங்கள் போடப்பட்டன. விசேஷ்யமான கோதையிலும் மற்ற விசேஷணங்களிலும் 'பட்டர் பிரான் புத்ரி' என்பது உயர்த்தி என்று திருவுள்ளம். 'ஜநகாத்மஜா' என்பதுபோல. (28

இதி விகஸிதபக்தேருத்திதாம் வேங்கடேஶாத்
பஹுகுணரமணீயாம் வக்தி கோதாஸ்துதிம் ய: |
ஸ பவதி பஹுமாந்ய: ஶ்ரீமதோ ரங்கபர்த்து:
சரணகமலஸேவாம் ஶாஶ்வதீமப்யுபைஷ்யன் ||௨௯||

இதி விகஸிதபக்தேருத்திதாம் வேங்கடேசாத்
பஹுகுணரமணீயாம் வக்தி கோதாஸ்துதிம் ய: ।
ஸ பவதி பஹுமாந்ய: ஸ்ரீமதோ ரங்கபர்த்து:
சரணகமலஸேவாம் சாச்வதீமப்யுபைஷ்யன் ॥ (29)

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஸ்ரீமத் வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு கோதாஸ்துதி: ஸம்பூர்ணா ॥

(ப-ரை) இதி-இந்தத் தோத்திரம் முழுவதிலும் காணும் ப்ரகாரமாக, விகஸிதபக்தே:-(கோதை திருவடியில்) மலர்ந்த

பக்தியையுடைய, वेङ्कटेशात् - வேங்கடேசரிடமிருந்து, उद्गताम् - தோன்றியெழுந்த, बहुगुणरमणीयाम् - பற்பல காவ்யகுணங்களால் நிரம்பி மனோரஞ்ஜகமான. गोदास्तुतिम् - கோதைவிஷயமான துதியை, यः - எவர், वक्ति - சொல்லுகிறாரோ, सः - அவர், श्रीमतः - லக்ஷ்மியோடு கூடிய, रङ्गभर्तुः - ரங்கநாதனுக்கு, शाश्वतीम् - சாச்வதகாலமும், चरणकमलसेवाम् - திருவடித்தாமரையின் ஸேவையை, अभ्युपैष्यन् - அடைபவனாக (அவருக்கு), बहुमतः - வெகுமதிபாத்திரமாக, भवति - ஆகிறான்.

கோதை திருவடியில் விஸ்தாரமான பக்தியையுடைய வேங்கடேசரிடமிருந்து தோன்றியெழுந்த அநேகவிதமான காவ்யகுணங்களால் அழகிய கோதாஸ்துதியை எவர் பாராயணம்செய்கிறாரோ, அவர் லக்ஷ்மியோடு கூடின ரங்கநாதனின் திருவடிஸேவையை அடைபவனாய்க்கொண்டு அவருக்குவெகுமதிபாத்ரனாக ஆகிறான்.

அவ:— விஷ்ணுசித்தரிடமிருந்து கோதை தோன்றினாள் என்று 9-ல் ஸாதித்தார். 'விஷ்ணுசித்தாத்மஜை' என்று முன் ச்லோகம் முடிவில் பேசியது அதைக் காட்டுகிறது. கோதை விஷ்ணுசித்தரிடம் தோன்றியதுபோல, கோதை துதி பக்திநிரம்பிய என் சித்தத்திலிருந்து தோன்றியதென்கிறார். 'ஸமுத்திதவதீம் அதிவிஷ்ணுசித்தம்' என்பதுபோல 'விகஸிதபக்தே: வேங்கடேசாத் உத்கிதாம்' என்கிறார். முதல் ச்லோகத்தின் உரையில் 5, 6-பக்கங்களில் இந்த ச்லோகத்தின் பொருள்களை விஸ்தரித்திருக்கிறோம். அதையெல்லாம் இந்த ச்லோக உரையில் சேர்த்துக் கவனிக்க.

उक्ति— இப்படி முன் ச்லோகங்களில் அநுபவம் சென்றபடி. 'இங்கிப்பரிசுரைப்பார்'.

विकसितभक्तेः— புதுவைப் பூந்தோட்டத்தில் பெருமாளிடம் தன்மயத்வத்தோடு கோதை வளர்த்த பூஞ்செடிகள் புஷ்பித்து புஷ்பங்கள் மலர்ந்ததுபோல, கோதையின் பக்தியும் பெருமாளிடம் புஷ்பம்போல் மலர்ந்து வாஸித்துப் பாமாலையாயிற்று. அதுபோல கோதையிடமும் அவள் பூமாலை பாமாலைகளிடமும் இந்த ஸ்தோத்ரபாவனையால் நம் ஸ்வாமியும் தன்மயத்வத்தையடைந்து, கோதையிடம் பக்தி அத்புதமாக மலர்ந்தது. 'இப்படி மலர்ந்து வாஸிக்கும் பக்தியையுடைய வேங்கடேசனிடமிருந்து இந்தத் துதி எழுந்தது' என்றும் சொல்லலாம். 'வேங்கடேசனிடமிருந்து அவருடைய இப்படி மலர்ந்த பக்தியிலிருந்து இத்துதி எழுந்தது' என்றும் பொருள் கூறலாம்.

उद्गताम्— கோதை விஷ்ணுசித்தரிடமிருந்து தோன்றியதுபோல, இத்துதியும் ஸ்வாமி சித்தத்தில் தோன்றியது. இருவருக்கும் கர்த்ருத்வமில்லை, ஆவிர்பாவாதிகரணத்வமேயுண்டு.

वेङ्कटेशात्— இப்படி கோதையிடம் ஸ்வாமிக்கு பக்தியமைந்தற்குக் காரணமுண்டு. வேங்கடவற்கென்றேயிருப்பாள் கோதை. அவள் பெருமையை வேங்கடவர் கண்டை உலகமறிய இத்துதியால் சப்திக்கவேண்டியது உசிதம். இரண்டு ஸம்ப்ரதாயஸ்தரும் தேசிகன்காலம் முதல் சேர்ந்து ஏககோஷ்டியாகப் பாடும் பாக்யம் பெற்ற ஸரஸ்வதி.

बहुगुणरमणीयाम्— கோதை சூடிய மாலை அநேக குணங்களாலும் நாருகளாலும் அரங்கனுக்கு ஹ்ருத்யமானதுபோல அநேககுணங்களையுடைய இத்துதியும்அரங்கன்முன் அரங்கேற்றி அவனுக்கு ஹ்ருத்யமாயிற்று.

वक्ति— சொன்னால் போதும். தப்பிச்சொன்னாலும் போதும். பெருமாள் விஷயமான திருப்பாவையை 'தப்பாமே' சொல்லவேண்டுமென்ற நிர்ப்பந்தமுண்டு. கோதை விஷயமான இப்பாமாலையை ப்ரஜல்பநம் பண்ணுலும் போதும் அரங்கர்க்கு பஹுமான்யராவதற்கு. ஆனால் ஒரு நிர்ப்பந்தம்மட்டுமுண்டு. அதென்ன ? 'இதி விகஸிதபக்தே: வக்தி' என்றும் அந்வயித்து 'இப்படி மலர்ந்த பக்தியாலே சொல்லுவனேல்' என்று பொருள் கொள்ளவேணும். ஸ்வாமி பக்தியைப்போல நமக்கும் பக்தி மலரவேணும். ஹ்ருதயபுண்டரீகம் விகஸிக்கவேணும்.

गोदास्तुतिम्— வாக்கைக் கொடுத்தவள் விஷயமான ஸ்தோத்திரம். இந்த ஸ்துதிரூபமான வாக்குபிக்ஷையும் கோதைத் தாயார் கொடுத்தது. ஆகையால் இத்துதியை 'பஹுகுணரமணீய' என்று கொண்டாடினது. ஆத்மச்லாகையன்று. "[illegible] यां नाथ भिक्षां. कृष्ण" (க்ருஷ்ண! என் நாதனே! அமுதத்தைப்போல் இனிமையும், நிர்தோஷமுமான வாக்கைப் பிக்ஷையாக எனக்கு நீர் கொடுத்ததை நான் ஸ்வப்நத்திலும் நினைத்து க்ருதஜ்ஞதையை அநுஸந்திக்காமல், என் வாக்கு என்று அஹங்காரமதம் பிடித்திருக்கிறேனே)

என்றூர் பண்டிதராஜ ஜகந்நாதர். முதல் சுலோகத்திலேயே ஸ்வாமி இத்தாயாரை வாக்பிக்ஷைக்காகச் சரணம் புகுந்ததைக் காட்டியுள்ளோம். 'வாக்கைத் தானம் செய்பவன்' என்ற திருநாமமுடைய கோதை இந்தத் துதிவாக்கையும்கொடாமலிருந்தால், கோதையாகாளே; கோதை துதியென்னும் பெயரும் பொய்யாமே. அவள்பேரும் இத்துதிபேரும் நிலைப்பதற்கு இத்துதியும் வாக்கும் அவளதேயாய்த் தீரவேணும்.

யஃ ஸஃ— 'யவனவன்'. ஸ்ரிய:பதியைப் பற்றித் திருவாய்மொழி தொடங்கியதுபோலும், ப்ரம்மஸூத்ரமும் உபநிஷத்தும் ப்ரஹ்மலக்ஷணம் பேசுவது போலும், இத்துதியை இப்படி மலர்ந்த பக்தியோடு சொல்லுமவன் மஹிமையை 'யவனவன்' என்று வர்ணிக்கிறூர்.

பவதி— நித்யமும் ஆகிறான். முக்காலத்தையும் சொல்லுகிறது. 'பவதி', அம்மா என்று கூப்பிடுவதுமாகலாம். கடைசிச்லோகத்திலும் 'அம்மா' என்று கூப்பிட்டு முடிப்பதழகு. 'பவதிபஹுமாந்ய:' என்று சேர்த்து ஒரு பதமாகவும் ஓர் அந்வயம் கொள்ளலாம். ஸ்ரீக்கும் பஹுமாந்யன்; ரங்கபர்த்தாவுக்கும் பஹுமாந்யன்; உனக்கும் பஹுமாந்யன். உன் வாக்காயினும் எனக்குத் தானம் செய்துவிட்டதால் உன் குழந்தையாகிய நானுச்சரித்த துதியென்று உனக்கும் அதில் பஹுமானம். என் முகமாக வெளிப்பட்ட துதியைப் படித்தானென்று என்னிடம் ஸ்நேஹத்தால் படிப்பவனிடம் பஹுமானம். பஹுமாந்ய:— காரணமான துதியிலுள்ள குணத்தின் பஹுத்வம் கார்யமான மானத்திலும் வருகிறதென்பது ரஸம்.

ஸ்ரீமத:— ஸ்ரீவிசிஷ்டனாகிய. கோதை பெருமையைக் கேட்பதில் ஸ்ரீக்கு மிக்க இன்பம். 'ஸ்ரீரங்கராஜஹரிசந்தன' என்று முதல்ச்லோகத்தில் பேசினபடி உபஸம்ஹாரமும் அப்படியே. முதலில் ஸமாஸம், இங்கே முடிவில் வ்யாஸம். 'ஸமாஸவ்யாஸதாரணம்' வித்வான்களுக்கு அழகு.

ரங்கதுர்ய:— அரங்கத்தின் ப்ரபு. காவ்யங்களையெல்லாம் அரங்கேற்றும் ப்ரபு.

சரணகமலஸேவாம்— பக்தியென்னும் புஷ்பம் மலர்ந்தது; ஹ்ருதயகமலம் மலர்ந்தது. இப்படி ஓர் புஷ்பம் மலர்ந்த

துக்கு அளிக்கும் பலன் என்ன? திருவடிக்கமலமென்னும் ஓர் அபூர்வபுஷ்பத்தைச் சாச்வதமாயநுபவிக்கும்படி அளிப்பதே. புஷ்பம் மலர்ந்ததற்குச் சாச்வதபலமான புஷ்பாநுபவமே பயன் என்று ஆநுரூப்யம். கமலத்திற்குப் பரிசு அபூர்வகமலம். ஹ்ருதயகமலம் மலர்ந்தபோது, இந்தத் திருக்கமலமும் அங்கே வீற்றிருந்து ஸுகத்தைக் கொடுக்கும். தாமரையோடு தாமரையின் யோகம் வரும். 'கேசவநம்பி கால்பிடித்தல்'.

ஶாஶ்வதீம்— "ஶாஶ்வதீஸ் ஸமா:" என்றவிடத்தில் போல ஸேவையென்னும் வணக்கமே, ப்ரஹ்வீபாவமே பரமமான ஸம்ஸித்தியாகும். 'தேஷாம் ஸுகம் ஶாஶ்வதம் நேதரேஷாம்'. இதைப் படிப்பவருக்கும் சாச்வதஸுகம் நியதம். 'சாச்வதம் ஸுகம்' என்று ச்ருதி பேசியதை 'சாச்வதமான சரணகமலஸேவாம்' என்று ஸூசிக்கிறூர். உன்னைச் சேவித்து உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள், உனக்கே நாமாட்செய்வோம் என்று கோதை ஆசைப்பட்ட பயன். 'திருமாலால் இன்புறுவர்' ஸேவையென்கிற நமஸ்(ந மம) என்பது சாச்வதப் பயனையளிக்கிறது. நம உக்திம் ச ஶாஶ்வதீம்.

ஸமுபைஷ்யந்— அடையப்போகிறவனாய். பரமபதத்தில் சாச்வதமான திருவடிஸேவை பாக்யத்தை அடைவானும். 'மாமுபேத்ய து கௌந்தேய' என்கிற ச்லோகத்தில் 'அசாச்வதமான துக்காலயத்தை அடையமாட்டார், பரமமான ஸம்ஸித்தியையடைவார்' என்பதை 'உபைஷ்யந்' என்பதால் ஸூசிக்கிறூர், 'மாம்' என்றவிடத்தில் அப்பதத்தைக்கொண்டே லக்ஷ்மியையும்கொள்ளலாம். ததந்தர்பாவந்யாயத்தாலும் கொள்ளலாம்.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே ।
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ॥

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ॥

கோதாஸ்துதிஸ்ஸம்பூர்ணா ॥

கோதாஸ்துதி முற்றிற்று.

॥ ஶ்லோகாநுக்ரமணிகா ॥

		ச்லோகம்.	பக்கம்.
1.	கார்யம் ஸகார்ய	23	90
2.	கஸ்மாதப்ரஶாத்	5	20
3.	க்ருதப்ராபராயிநி	24	94
4.	க்ஷோபேதரத்ருவி	15	66
5.	இதி விகஸித	29	109
6.	க்ருஷ்ணாஶயேந	4	15
7.	ஹோதே ஶரணே:	25	98
8.	சக்ராவதேந	18	75
9.	ஜாதாபராயலேவி	27	104
10.	தாதஸ்ம்ருதே	10	45
11.	தந்மே ஜ்ஞாநக்ருத்	19	78
12.	கசகோல்யஸ:	3	11
13.	கஷ்டஸதஶாஸ்த்ர	14	61
14.	கபோதளஸிதாஶநி	16	69
15.	திஷ்ணதக்ஷிணாவலி	11	49
16.	தத்வப்ராபதே	22	86
17.	யத்ர ஸதஸ்த	20	80
18.	நாமேஶய:	13	55
19.	ப்ராயேண தேவி	12	52
20.	ஹோக்தும் தவ	8	33
21.	ஶாத: ஸஶக்தித்வதீம்	9	38
22.	ரஜ்ஜ்வ தபிதண	26	101
23.	ரஜ்ஜ்வஶ்வரஸ்ய	21	83
24.	வஶீக்ருத:	7	27
25.	விஶ்வாயஶோந	17	73
26.	தேவதேஶிக:	2	7
27.	ஶதஶவேஶணி	28	106
28.	ஶோணாயரேzவி	6	22
29.	ஸ்ரீவிஷ்ணுசித்த	1	1

ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷா விமர்சம்.

(3-வது ஸம்புடம் 4-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி.)

யோக்யதையும் ஸம்ஸர்காகாரமும் இருக்குமிடங்களில் விசேஷ்யத்திற்குப்போல் விசேஷணத்திற்கும் அந்வயம் நியதம் என்கிற அபிப்ராயத்தினாலேயே 'ஸர்வாபிகரோ ராஜா புருஷ:' என்றிவை முதலிய ஸ்தலங்களை த்ருஷ்டாந்தமாக்கி 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்கிறவிடத்திலும் விதேயத்தோடு விசேஷ்யத்துக்கும் விசேஷணத்துக்கும் ஏகரூபமான அந்வயம் ச்ருதப்ரகாசிகையில் அருளிச்செய்யப்பட்டது. பிராட்டிக்கு உபாயதாவச்சேதகத்வத்தை ஒப்புக்கொள்ளுமிவரும் அவச்சிந்நத்வஸம்பந்தேந விசேஷ்யாந்வயித்வாபிப்ராயத்தை இசைந்தாராயிற்று. ஆகையால் 'நநு க்ரியாந்வயமில்லாமல் ப்ரயுக்த ஸந்நிதாநமாத்ர நிபந்தநமாகக் கூடுகிற ஸஹயோகம் உபலக்ஷணத்வப்ராயம்தான்' இத்யாதியால் அப்படிப்பட்ட உபலக்ஷணத்வம் ஸ்ரீதேசிகரால் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று க்ரியாந்வயமில்லாமையை ஸமர்த்திப்பது உசிதமன்று. ஆக இவ்வளவால் பக்ஷத்வயத்திலும் சாப்தாந்வயமே உபபாதிதமாகையால் பிராட்டிக்கு அப்ராப்யாந்தர்பாவமாவது ஆர்த்தாந்வயம் இருந்தபோதிலும் சாப்தஸாகாங்க்ஷத்வமில்லாமையால் என்பது ஸமாஹிதம். அப்ராப்யாந்தர்பாவத்துக்கும் சாப்தாந்வயமில்லாமைக்கும் நியதஸம்பந்தமில்லை. சாப்தாந்வயமிருக்கச்செய்தேயும் மாம் ஶோத்யவய: என்றிவை முதலிய ஸ்தலங்களில் ஸவாதிகளுக்கு அப்ரதானகர்மத்வம் சாஸ்த்ரங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டது. 'பத்ந்யா ஸஹ யஜூஸம்யோகே', 'ஜாயாபதீ அக்நிமாதததீயாதாம்' இத்யாதி ப்ரமாணங்களால் பத்நிக்கும் க்ரியாந்வயம் சாப்தமாயிருக்கச்செய்தேயும் அப்ராப்யாந்தர்பாவமே ஒப்புக்கொள்ளப்பட்டதன்றோ. அப்படி சாப்தாந்வயமே ப்ராப்யாந்தர்பாவப்ரயோஜகம் என்றாலும் இப்படிப்பட்ட ப்ராப்யாந்தர்பாவமும் பிராட்டிக்கும் அவ்யாஹதமே. ப்ரணவத்தினால் ஸமர்ப்பணத்தை விதிக்குமிடத்தில் காரணபூதமான ப்ரணவத்தில்

நாராயணனுக்குப்போல் பிராட்டிக்கும் ஶப்தாந்வயமுண்டாகையால் த்வயத்தில் பிராட்டிக்கு உபாயத்வம் ஸித்தியாது என்றாலும் இவருக்கு யாதொரு இஷ்டஸித்தியுமில்லை. இங்கு வக்தவ்யங்களை மேலே உபபாதிப்போம். ஶரண வ்ருத்தி பின்னமாகையால் பதிபத்ந்யோஸ்ஸாமாநாதிகரண்யம் கூடாது என்கிற வாதத்திற்கும் விஶேஷ்யாந்விதத்வேந ஸித்தவிஶிஷ்டவிஶேஷணாந்வயம் உபபாதிதமாகையால் ஸமாதானம் சொல்லப்பட்டது.

ஶ்ரீமத்ப்ரபத்திவாக்யஸ்ய பதமுப்யர்யத்ர ஶ்ரிய: ।
ஸாமாநாதிகரண்யேந ப்ரோக்தவ்யம் ப்ரஸாதிதம் ॥
விஶிஷ்டஸ்யைவ ரக்ஷாவிஷயத்வாதிகாரோ நாத்ர ஸம்ஶய: ॥

எட்டாவது அதிகாரம்.

ஸஹாயாந்தோபாயத்வாஸ்ஸ்ஸ்ரீஶாஸ்த்ரஜ்ஞ ஸம்மதா: ।
ஸாபேக்ஷத்வபுருஷகாரத்வம் நஹேந்நேதி ஸாத்யதே ॥

பிராட்டிக்கு ஸஹாயாந்தோபாயத்வம் என்கிறவர்கள் பக்ஷத்தில் புருஷகாரஸஹகாரிப்யாம் ஸித்தா என்றால் ஸஹகாரிகள் என்று ஏற்படுவதுபோல் உபாயன் என்றே ஸித்திக்கும். இந்த ஸஹாயாந்யம் புருஷகாரத்திலேயே பர்யவஸிக்கும் என்பதற்கு ஸமாதானம் சொல்லுகிறோம்.

'லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேஶ: .... மீயதே ॥' 'பத்ந்யாஸஹ ச ஶரணம் ப்ரபத்யது' என்றிவ்வாறாக ப்ரமாணஸம்ப்ரதாயங்களால் ஈச்வரதுல்யமாக உபாயத்வம் பிராட்டிக்கும் உண்டு என்பது ஸித்தாந்திதம். ஸ்ரீதேசிகனும் இருவரும் ஏகசேஷித்வாச்ரயமாகைபாலே ஸவிஶேஷங்களிற் போலே ஶ்ருதஸவிஶேஷணப்ரதிபாதிகள் என்றும் யாகதத்திற்போலே பத்நீயாகமாக ஶாஸ்த்ரங்களில் உபதேசங்களுக்கும் ஏகன் யஜமானன் என்னுமாபோலே ஸகர்த்ருத்வத்திற்கும் குறையில்லை என்றும், 'ஶரண்ய

தம்பதிவிஷயம், ஶேஷிதம்பதியாதீக்ஷாம்' என்றும் இருவருமுபாயமென்பதைப் பற்பலவிடங்களில் அருளிச்செய்தார். இப்படியாகில் உபாயத்விப்ரஸங்கத்தை 'ஸந்ந்யாஸந்ந்யாஸ விவாதாதிநிவ்ருத்தௌ தத்வரக்ஷத: । ஸைகேகண்யஶேஷாணாமேகமேநாம் ஸ்வகவிதி' என்று பரிஹரித்தருளினார். ப்ரதான ப்ரயாநமாவமன்றியிலும் ஒருவருக்கொருவர் ஐகாவிவாதம் செய்துகொண்டும் இருக்கும் இரண்டு உபாயங்களை ப்ரதிபாதிக்கில் அன்றோ உபாயத்விகம் ப்ரஸஜிக்கும்? அப்படியன்றியில் ப்ராதாநாவஸ்தாநமேவ உபாயத்தில் தத்ப்ரஸஜமில்லை என்று திருவுள்ளம். ஸஹாயாந்தோபாயமாவது புருஷகாரத்வரூபமே என்பது உசிதமன்று. பதிகதப்ரதாங்களான ஶரவகாரரக்ஷாஸக்த்யாதிகளில் ஸஹகதத்வமன்றோ ஸஹாயாந்தோபாயம். இது புருஷகாரத்வரூபமன்றே. புருஷகாரத்வமே அப்ரதானோபாயத்வம் என்று பரிபாஷைக்கு யாதொரு நியாமகமுமில்லை. புருஷகாரத்வஸமாநாதிகரணரக்ஷாஸக்த்யுபதம் ஸஹாயாந்தோபாயம் என்றும் சொல்லலாமன்றோ? உபாயாந்தரஸகதவ ஸத்யோபாயம் வா, உபாயாந்தரதமாவது விஶேஷணதயா உபாயப்ராவதகமாகை, ப்ராதாநோபாயவ்யாவ்ருத்திக்காக விஶேஷணதயா, நாமங்களுக்கும் விக்ரஹத்திற்கும் விஶேஷணதயுமுண்டாகையால் தவ்யாவ்ருத்யபும் விஶேஷ்யத்வம் என்றிவ்வாறாக ஸஹாயாந்தோபாயநிரூபணம் செய்யக்கூடியதாயிருக்க, புருஷகாரத்வம்தவிர வேறுவிதமாக ஸஹாயாந்தோபாயம் சொல்லமுடியாது என்று நிஷ்கர்ஷிப்பது ப்ரமாணவசத்திகளுக்குப் பொருந்தாது. இப்படியாகில் உபாயத்விப்ரஸங்கம் பரிஹ்ருதமாகும்வழியென்னவென்னில், இவரும் லக்ஷ்மீக்கு புருஷகாரதயா உபாயத்தை ஒப்புக்கொள்ளுகிறபடியால் ஸ்வபக்ஷத்திலும் உபாயத்விப்ரஸங்கத்தைப் பரிஹரிக்கவேணும். 'உபாயஶப்தம் வ்யவஹிதஸாதநத்திலும் அவ்யவஹிதஸாதநத்திலும் வர்த்திக்குமென்னுமிடம் ச்ருதிஸ்மிரு[illegible] என்பது ஸ்ரீதேசிகனுடைய

ஸாபராதஸ்ரீஸூக்தி. ஆகையால் ஸாக்ஷாதுபாயபரமாக உபாயசப்தத்தை ஸங்கோசம் பண்ணிக்கொண்டு உபாயத்வித்வப்ரஸங்கத்தைப் பரிஹரிக்கவேண்டும். அதுபோலவே உபாயசப்தம் ஸ்வதந்த்ரோபாயபரமாகையால் ஸ்வதந்த்ரமான இரண்டாவது உபாயம் ஸித்தாந்திகளாலும் ஒப்புக்கொள்ளப்படவில்லையாகையால் உபாயத்வித்வப்ரஸங்கமில்லை. மேலும் நிரூபிக்கிறோம் உபாயைகத்வமாவது உபாயகதமான ஸங்க்யாஸாமாந்யமன்று. ஸங்க்யை ஸர்வவஸ்துஸாதாரணமாகையால் அநேக உபாயங்களிருந்தபோதிலும் ஒவ்வொரு உபாயத்திலும் ஏகத்வஸங்க்யை உண்டாகையால் நிரர்த்தகமாகும். ஆகையால் ஸ்வஸஜாதீயத்விதீயரஹிதத்வம்; அதாவது தனக்கு ஒப்பான இரண்டாவது இல்லாமை. இந்த பாரிபாஷிகைகத்வமே விவக்ஷிக்கவேண்டும். இந்த ஸாஜாத்யந்தானும் த்ரவ்யத்வபதார்த்தத்வாதிநா இதர வஸ்துக்களுக்கும் உண்டாகையால் ஸாஜாத்யத்தை ஸங்கோசிக்கவேண்டும். ஸ்வதந்த்ரோபாயத்வேந ஸாஜாத்யம் விவக்ஷிதமாகக் கொண்டால் ஸாத்யஸ ஸ்வதந்த்ரோபாயஸஜாதீயத்விதீயரஹிதத்வமே உபாயைகத்வம் என்று விஸிப்பதால் பிராட்டிக்கு 'யாவகவாக்ஷள தாமெளவ்' என்றிவை முதலிய ப்ரமாணங்களால் ஸ்வதந்த்ரோபாயத்வமே ஸித்திப்பதால் ரக்ஷாஸாக்ஷாத்கர்த்ருத்வமான உபாயத்வம் இருந்தபோதிலும் உபாயைகத்வத்துக்குக் குறையில்லை. இவ்வாறான பல ப்ரகாரங்களால் உபாயத்வித்வப்ரஸங்கபரிஹாரமும் உபாயைகத்வஸமர்த்தநமும் உபபாதிக்கக்கூடுமாகிலும் திங்மாத்ரேண உதாஹரிக்கப்பட்டது. உத்தரகண்டத்தில் பிராட்டிக்கு கைங்கர்யப்ரதிஸம்பந்தித்வத்தை ஒப்புக்கொள்ளும் இவருடைய பக்ஷத்திலும் ப்ராப்யத்வித்வப்ரஸங்கம் செய்தால் முன் காட்டிய வழியிலே அதைப் பரிஹரிக்கவேண்டும். ஸ்வபக்ஷத்தில் ப்ராப்யத்வித்வப்ரஸங்கத்தைப் பரிஹரிக்கும் வழியிலிறங்கினால் உபாயத்வித்வப்ரஸங்கபரிஹாரமும் ப்ரஸங்கிகளுக்கே கையிற்கனிபோலாகும்.

ஸ்ரீ:

உ த் தி ர வா த மா ன

வைரங்கள் முதலிய ரத்தினங்களால் செய்த பொன், வெள்ளி நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், பெங்களூர், சேலம், மதுரை, காசி முதலிய பல ஊர் பட்டு, ஜவுளி தினுசுகளும் இங்கு கிடைக்கும்.

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

V. ராமய்யங்கார்,
கவர்னிங் டைரக்டர்.

ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்,
109, சைனபஜார் ரோட்,
பைராகிமடம் கோவில் சமீபம்,
மதராஸ்.

ஸ்ரீ-உ-வே வித்வான் சின்னமு. ஸ்ரீநிவாஸபாட்டாசாரியார்ஸ்வாமி ஸ்ரீமத் வேதாந்ததேசிகவைபவப்ரகாசிகை கீர்த்தனை (தமிழ்) காபிகள் 100 அனுப்பியிருக்கிறார். ஷை புஸ்தகத்தின் விலை ரூ. 0—8—0

ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணீ சந்தாதாரர்களுக்கு பாதி விலைக்குக் கொடுக்கப்படும். கிளேஸ்-காயிதத்தில் 84-பக்கம் கொண்டது.

Registered No. M. 3343

தேக ஆரோக்கியம் உங்களது
பிறப்பு உரிமையல்லவா?

மஹாசந்தனாதித் தைலம்.

அபார சக்தி வாய்ந்ததும், மூளைக்குச் சிறந்ததுமான தைலம் இது ஞாபகசக்தி யற்றவர்களுக்கும், மந்த மூளையுள்ளவர்களுக்கும் மனவருத்தம், பார்வை மந்தம், கண் எரிச்சல், தலைநோய், உச்சந்தலையில் தோல் உரிதல், வழுக்கைபோன்ற ஸகல நோய்களுக்கும் மிகச் சிறந்தது ஒரு மாதத்திற்கு உபயோகப்படக்கூடிய 12 அவுன்ஸ் கொண்ட புட்டி விலை ரூ 5

உங்கள் நரம்புகளையும் மூளையையும் பலப்படுத்த ஆயர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் என். வி. ஸ்ரீராமாசார்லு அவர்களின் பிரசித்தி பெற்ற திவ்விய ஒளஷதங்களை சாப்பிடுங்கள்

"சித்தகல்ப மகரத்வஜம்" (ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியானாலும் தவறாது கண்டிப்பதில் பொன்னைப்போல் போற்றத் தக்கது மூளை வேலை செய்பவர்களுக்கு இது வரப்பிரசாதம் ரத்தத்தைச் சுத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றது பூராவும் குணமடைய 60 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ 10

மதருஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்,
சென்னை.

ஹெட்ஆபீஸ் 289, எஸ்பிளநேட். } தபால்பெட்டி 151 { 'ரஸாயனசாலை ஸ்ரீராமபவனம்'
கிளைஆபீஸ்.180, மவுண்ட்ரோட். } மதருஸ் { மைலாப்பூர். போன் 3034. தந்தி 'கல்பம்'.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.